நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி - 7

தொகுதி - 111

திருவள்ளுவர் ஆண்டு - 2048

திங்கள் இதழ்

விலை ரூ. 20

ஜூலை- 2017




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறிஞர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இதழ் மணம் | 4 |
| 2. | சிலப்பதிகாரப் புதையல்கள் - செங்குட்டுவன்<br>முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | 8 |
| 3. | இராமானுசரும் தமிழும்<br>பேராசிரியர் ப.மருதநாயகம் | 13 |
| 4. | எழுத்துச் சீரமைப்பும் ஐகார ஔகாரங்களும்<br>பேராசிரியர் இரா.கோதண்டராமன் | 23 |
| 5. | விட்டுக் கொடுத்தல்<br>பேராசிரியர் மு.மணிவேல் | 27 |
| 6. | தமிழில் ஒப்பியல்-இலக்கிய, இலக்கண ஆய்வுகள்<br>முனைவர் உ.கருப்பத்தேவன் (சென்ற இதழின் தொடர்ச்சி) | 29 |
| 7. | சங்கச் செய்திகள் | 39 |



வலைதளம்: www.maduraitamilsangam.com

: www.senthamilcollege.com

மின்னஞ்சல் : maduraitamilsangam@yahoo.co.in

: principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

செங்குட்டுவன் யார் ? குட்டையா ? நெட்டையா ? அவையல்ல அவனுக்கு பெருமை சேர்ப்பது. செங்குட்டுவன் என்பது செவ்விய – நேரிய – நடுநிலைபோற்றிய குட்டுவன் என்பது போதரும்.

சேரன் செங்குட்டுவன் வாழக்கைச் சூழல் நெடுஞ்சேரலாதன், இளங்கோ, பரணர், கபிலர், சாத்தனார் மற்றும் நூலறிபுலவர் பெருமக்கள் எனப்பல சான்றோர் கூட்டத்துடன் தொடர்புடையதாகும் இப்பெரு மக்களோடு அவனுக்கிருந்த தொடர்பு பண்பட்ட நடைமுறை வாழ்க்கையைக் கற்றுக் கொள்வதோடு அவன் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தியது. மனத்தூய்மையும் தன்னைச் சூழ்ந்திருக்கின்ற சுற்றமும் ஒருவனைச் செப்பம் உடையவனாகச் செய்கிறது. விலங்குணர்ச்சிகளிலிருந்து விடுபட்டு மனஒழுக்கம் என்பது உயிர் ஓம்புதலின் பயன்என்பர் சான்றோர். அதனை ஆசிரியர் திருவள்ளுவர் வாய்மையாற் காணப்படும் என்பார்.

செப்பம் செங்குட்டுவனுக்குத் தன்னியல்பில் அமைந்தது. அவனைச் சான்றோர் செங்குட்டுவன் எனப்போற்றினர் என்னும் செய்தியைக் கட்டுரையில் ஆசிரியர் இளங்குமரனார் விளக்கும் அகச்சான்றுடன் கூடிய செய்திகள் நெஞ்சை நெகிழ்விக்கும் தமிழ்ச் சொற்களால் வெளிப்படுகின்றன. பேராசிரியர் இளங்குமரனார் முதுபெரும் புலவர்; துய்மையும் வாய்மையும் அவர் சால்பும் நெறியுமாகும். செங்குட்டுவன் உருவகம் தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து அறிவுநலம் பெறச் சான்றோர் இனத்திருக்கும் நற்றிறத்தை வலியுறுத்துவதாகும்.

'இராமானுசரும் தமிழும்' என்னும் பேராசிரியர் ப.மருதநாயகம் கட்டுரை காலம் கருதி எழுதப்பட்ட கட்டுரை. செவ்வியல் மொழி தமிழ் என்பது இன்று நேற்றுத்தோன்றிய கூற்று எனப்பலர் தவறான கருத்துக் கொண்டுள்ளனர். செந்தமிழ் மொழியின் ஆழமும் பரப்பும், சமஸ்கிரு மொழியினும் பல்லாற்றானும் உயர்ந்தது. அதனை இராமானுசர், நாதமுனி, நாதமுனியின் பேரன் யமுனா, திருவரங்கத்தமுதனார், பெரிய வாச்சான்பிள்ளை, நஞ்சீயர், வேதாந்த தேசிகன் போன்ற வடமொழி, தென்தமிழ் முழுதும் அறிந்த இருமொழிப்புலவர்கள் கூற்றுக்களை மேற்கோள்காட்டி ஆசிரியர் விளக்கும் திறம் அறிவுடையோர் உளம் கொள்ளத்தக்கது. உலகம் தழுவிய மேலை நாட்டு அறிஞர் ஏ.சி.பர்னல் என்னும் அறிஞர் தாம் எழுதிய (Aindra School of Sanskrit Gramma (1875) என்னும் நூலில் வடமொழி ஆகிய சமசுகிருதம் தமிழுக்குக் கடன்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

வடமொழியும் தமிழும் உணர்ந்த பெரியவர், பெரிய வாச்சான் பிள்ளை, செந்தமிழ் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம் அது எப்பொருளையும் ஐயத்திற்கு இடமற்ற சொற்களால் விளக்குவதாலாகும்; வடமொழி வேதங்களைப் போல் புராணங்களையும் இதிகாசங்களையும் நம்பியிருப்பதால் அல்லவென்று அவர்தரும் விடை பெரும் பாராட்டுக்குரியது. புராண இதிகாசப் பொய்மைகளை நம்பி வடமொழி வேதம் பேசுகிறது என்ற கருத்து அறிஞர்

போற்றும் உண்மை இக்கட்டுரை தொடர்ந்து ஐந்து ஆறு திங்கள் வெளிவரும். அரியபல உண்மைகளை ஆசிரியர் அரிதின் முயன்று நுட்பாக வெளிப்படுத்தியுள்ளார் கட்டுரையின் ஒவ்வொரு தொடரும் மனம் கொள்ளத்தக்க ஆழ்ந்த பொருளை உடையது தமிழ் இலக்கியப் பின்புலத்தோடும் மொழி உணர்வோடு மெய்ப்பொருள் உணர்வோடும் பகிர்ந்து கொள்ளத்தக்க உண்மைகள் பல உள; கற்க

பேராசரியர் இரா. கோதண்டராமன் ஐகாரம் ஔகாரம் குறித்து மொழியியல் நோக்கில் திறனாய்வுக்கு எடுத்துக் கொள்கிறார்; அசையமைப்பு (Syllabic Structure) என்று வரும்போது மொழியியல் அடிப்படையில் ஐ, ஔ இரண்டும் இரண்டு அசைகொண்ட அமைப்பினவாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில் மொழியில் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு அசையின் சிகரமாகும் இரு குறில் பிணைந்த வடிவங்கள் ஓரசையாவதில்லை இதற்குமாறுபட்டு தமிழில் இவ்விரு வரி வடிவங்களும் உள்ளன. தேவையற்ற சுமை என்பது ஆசிரியர் எடுத்து வைக்கும் மொழி நூல் சிந்தனை. இதனைத் தமிழ் மாணவர், ஆசிரியர் சிந்தனைக்கு விட்டு விடலாம்.

பேராசிரியர் மு.மணிவேல் "விட்டுக் கொடுத்தல்" என்னும் தலைப்பில் விட்டுக் கொடுத்து அன்பைப் பகிர்ந்து கொள்; இன்பம் பெருகும் என்கிறார். உலகவரலாற்றில் மனிதன் விலங்குகளிடமிருந்து கோபத்தையும் அச்சத்தையும் தன்னுடைமையாகப் பெற்றுக் கொண்டான். அதனால் போட்டி வாழ்வுரிமையாக உலகமாந்தர் வாழ்க்கையில் முன்னுரிமை வகிக்கிறது. அது குறித்த சிந்தனையை ஆசிரியர் எடுத்துரைக்கும் நலம் சிறந்தது.

பேராசிரியர் உ.கருப்பத்தேவன் தமிழில் ஒப்பியல் இலக்கிய இலக்கண ஆய்வுகள் என்னும் தலைப்பில் தமிழில் வெளி வந்துள்ள ஒப்பியல் இலக்கியக் கட்டுரைகள், இலக்கண ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். மாணவர்கள் ஆசிரியர்கள் மேலும் ஆய்வுசெய்வதற்கு இவ்வாய்வுச் செய்திகள் பெரிதும் பயன்படும் தமிழ் வழக்கில் உள்ள மக்கள் மொழி; காலந்தோறும் அதன் வழக்கு மக்கள் பயன்பாட்டில் மாற்றம் பெறும்; அதனை உற்று நோக்கும் அசிரியர்கள் காலத்துக்குத் தேவையான மாற்றங்களை இலக்கண வழக்கில் மேற்கொள்ள வேண்டும். மக்கள் மொழியைப் பயன்படுத்துகிறார்கள்; அவர்களுக்கு மொழி என்பது உணர்வையும் கருத்தையும் வெளிப்படுத்தும் கருவி. தங்கள் கருத்தை எளிதாகவும் தெளிவாகவும் சொல்லி கேட்பவனைச் சென்றடைந்து பயன் பெறுவதே மொழியின் நோக்கம்

தொல்காப்பியம், நன்னூல் நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் எனப் பல நூல்கள் கால வரிசையில் பயன்கருதித் தோன்றியுள்ளன. அவற்றுக்கு உரை அசிரியர்கள் உரை வகுத்துள்ளனர்; அவ்வுரைகளும் நூல்களும் திறனாய்வும் செய்யப்பட்டு காலந்தோறும் புத்துரைகள் வந்துள்ளன. இவற்றை வரலாற்று நோக்கிலும், பயன்பாட்டு நோக்கிலும் ஒப்பாய்வு செய்து நூலாசிரியர்களையும் உரை ஆசிரியர்களையும் திறனாய்வு செய்ய வேண்டிய பணியைப் பேராசிரியர் கருப்பத்தேவன் தொகுத்துரைத்துச் சுட்டிக் காட்டியிருப்பது அவருடைய ஆய்வு நோக்கையும் பரந்துபட்ட நூல் தொடர்பையும் காட்டுகிறது. இக்கட்டுரை மேலும் ஆய்வுவளர் ஒப்பாய்வு செய்வதற்குரிய நெறிமுறைகளை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

# வைகை ஆறாகுமா?

பேராசிரியர் **இரா.சதாசிவம்**

உலகம் என்பது தான் சார்ந்த சமூகம், அரசியல், பொருள் ஈட்டல், வயிறு புடைக்க உண்டல் உறங்கல் என்ற அளவில் மக்கள் சிந்தனை குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிட்டது. அதனால் மனித சமூகத்திற்குப் பிற உயிரினங்களைப் பற்றிய பரிவு சிதைந்துவிட்டது. அவை அழிவதைப் பற்றிய கவலையின்மையும் அழிவதால் ஏற்படும் எதிர் விளைவுகளைப் பற்றிய அறிவின்மையும் மக்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் துன்ப கதியைத் துரிதமாக்கி வருகிறது

நம்மோடு வாழ்ந்த உயிரினங்களுக்கு மக்கள் கொடுக்கும் இடநெருக்கடி அவற்றை அழித்துக் கொண்டிருக்கின்றன. விலங்கினங்கள் தாங்கள் குடியிருந்த காட்டில் மூன்றில் ஒரு பங்கு காட்டை மனிதர்களின் படையெடுப்பால் இழந்து தவிக்கின்றன. யானை, புலி, ஒரான்குட்டான், கொரில்லா, சிங்கம் போன்ற விலங்கினங்கள் தடையின்றிச் சுற்றித்திரிந்த நடைபாதை வாழ்விடங்களில் எண்பது விழுக்காடுகாடுகள் அழிக்கப்பட்டு அவை அழிவை நோக்கித்தவிக்கின்றன. அவைகள் நாம்தோன்றிய பூமியில் நம்மோடு தோன்றியவை. அவற்றின் மீது நமக்கு இரக்கமில்லை. அதனால் பல்வகை உயிரினங்களும் மிக வேகமாக பாதுகாப்பற்ற தங்கள் வாழ்விட நாசத்தால் அழிந்து கொண்டிருக்கின்றன. பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்பாக இருந்த யானை, புலி போன்ற விலங்குகள் அழிவின் விளிம்பில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முதுகெலும்புள்ள விலங்குகள் உயிரினங்களின் பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்றன தென்னாட்டில் ஐந்தில் நான்கு உயிரினங்கள் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. பூமி என்னும் இக்கிரகம் நமக்கு மட்டும் சொந்தமல்ல; இந்த மண்ணில் தோன்றிய பாருக்கு மேற்பட்ட விலங்குகள், மரம் செடி கொடிகள் எல்லாம் மனிதர்களின் அறியாமை மிக்க அழிவுச் செயலால் அழிந்துவிட்டன இந்த மண்ணின் வரலாற்றில் இவ்வளவு பெரும் கொடுஞ்செயல் வேறு எதுவும் இல்லை இத்தகைய அழிவிற்குக் காரணம் உயிரினங்களின் குடியிருப்பை மக்கள் ஆக்கியரமிக்கும் நடவடிக்கைகள்; அதனால் அவை தங்களுடைய வாழ்விடங்களை இழந்து அழிகின்றன மக்கள் விளம்பர அடிமைகள்; அடிமையாகி அளவுக்கு அதிகமாக பொருளை வீணடிப்பது. பூமியைக் கெடுக்கும் வகையில் நீர், காற்று, மண் ஆகியவற்றைப் பாழ்படுத்துவது. காடுகளை அழித்துப் பொருளீட்டுவது; மண்ணை அழித்து பொருளீட்டுவது; பாறைகளை அழித்துப் பொருளீட்டுவது; விலங்குகளை அவற்றின் எலும்புகளுக்காக அழித்துப் பொருளீட்டுவது என அழிவுக்கும்பல் நடத்தும் அடாவடித்தனத்தால் காடுகளும் உயிர்களும் அழிந்து உலக மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற இடமாக மாறி வருகிறது. சுற்றுச் சூழல், வெப்ப மயமாதல் ஆகியவற்றால் உலகம் அழிவின் விளிம்பில் தவிக்கிறது. இத்தகைய உலக நாசத்திற்குக் காரணம் மக்கள் தான் சார்ந்திருக்கின்ற பிற உயிர்களிடத்தில் பரிவுணர்ச்சி இன்மையும் பொருள் வெறியுமாகும். இக்கொடுமையிலிருந்து மீள்வதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

பல்கலைக்கழகங்களின் நோக்கம் சமூக நன்மை சார்ந்த வளமான சிந்தனைகளை அளித்து செயல் ஊக்கம் மிக்க மக்களை உருவாக்குவதாகும். அத்தகைய செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாகச் செயல்படுவதுமாகும். புத்தகங்களில் உள்ளவற்றை ஆராய்ச்சி செய்து வேறு புத்தகம் போடுவதும் அவற்றை மற்றொருவர் பார்த்து இன்னொரு புத்தகம் போடுவதும் பல்கலைக்கழகங்களின் பணியாகாது.

மதுரைப் பல்கலைக்கழகம் தென்தமிழகத்தின் தலைமை சான்ற கல்விக்கழகமாகும். அதன் நரம்பு மண்டலமாக ஒடுவது வைகை நதியாகும். அதன் தற்போதைய நிலைமை என்ன? ஆறு என்பது நீரோட்டம் உள்ளதாகும்; அதன் குறுக்கே அணைகள்; குறுக்கே தடுப்பதால் நீரோட்டம் தடைப்பட்டது. வைகை நதியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் காடுகள் அழிந்துவிடுகின்றன. மனிதர் பயிர்த்தொழில் செய்யுமிடமாக மாற்றமுயல்கின்றனர். வைகைநதியின் நீர் ஆதாரம் பாதுகாப்பாக இருக்க நீர்ப் பிடிப்பும் பகுதியை பாதுகாக்க வேண்டும். அப்பகுதிக்குள் மனிதக்ள் நுழைவதற்குத் தடை விதிக்க வேண்டும். மரங்களை வளர்த்துப் பாதுகாப்பான பகுதியாக அறிவிக்க வேண்டும்.

இவற்றுக்கு வழிகாட்டும் திட்டங்களை மதுரைப்பல்கலைக்கழக சூழலியல் துறையினர் அப்பகுதியில் பயணித்துப்புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வேண்டியுள்ளது. மாணவர்களை இப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் செயலூக்கம் பெறுவதற்குப் பல்கலைக்கழகங்கள் வழிகாட்டுதல் அவசியம். ஒரு பத்தாண்டுத் திட்டம் வைத்துக் கொண்டு தொண்டு அடிப்படையில் நீதி ஆதாரங்களைப் பெருக்கி காடு வளர்ப்பது பாதுகாப்பது என்ற முயற்சிகளைச் செய்தல் அடிப்படை வேலையாகும்.

இப்பணிகளை நீண்டகாலத் தொலைநோக்குப் பார்வையோடு பார்த்தால் வைகைநதியின் நீரை நம்பியிருக்கும் மக்களும், அவர்கள் பெருமையோடு பேசுகின்ற பண்பாடு, நாகரிகம், கல்வி, கலை, கல்விச்சாலைகள் வேறுபல பண்பாட்டு மையங்கள் எல்லாம் பாதுகாக்கப்படலாம். இவற்றையெல்லாம் யாராவது செய்வார்கள் என்றோ, இவை நடக்காது என்றோ நினைத்து தூங்கிவிட்டால் சிலபத்தாண்டுகளில் வெறும் கட்டிடங்கள் தான் இருக்கும் மனிதர்கள் வாழுமிடங்களாக இருக்கும் என்று தோன்றவில்லை. சிந்தியுங்கள்; செயல்படுங்கள். உலகத்தின்பிறபகுதி ஆசிரியர்களையும் மாணவர்களையும் உற்றுக் கவனியுங்கள்; அவர்களுடைய செயல்திட்டம் எப்படி வடிவமைக்கப்படுகிறது. நீங்கள் உங்களுடைய செயல்திட்டங்களை எப்படி வடிவமைக்கிறீர்கள்? கல்விச் சாலைகள் பொழுதுபோக்கு மையங்கள் அல்ல; கல்வியும், அறிவும் செயல் ஆளுமையும் நிறைந்த அறிஞர்கள் உலகுக்கு வாழும் வழிகாட்டும் புதிய புதிய உண்மைகளை நாளும் கண்டு காட்டுகின்ற மையங்கள். (இக்கட்டுரை அமெரிக்க நாட்டின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ரொசால்போ கட்டுரையைத் தழுவியது).

# சிலப்பதிகாரப் புதையல்கள் 3
## செங்குட்டுவன்

முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

குட்டுவன் என்பது குடிப்பெயர்; செம்மை என்பது அடைமொழி. இவ்வடைமொழி வண்ணம் பற்றியதோ? தன்மை பற்றியதோ? இதனை ஆராய்வதே இக்கட்டுரை

*"செம்மை சிறுமை சேய்மை தீமை*
*வெம்மை புதுமை மென்மை மேன்மை*
*திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்*
*இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே"*

என்பது பண்புப் பகாநிலைச் சொற்கள் பற்றிய நூற்பா. இந்நூற்பாவிற்கு உரைவரைந்த பெருமக்கள் செம்மைக்குக் கருமை வெண்மை முதலியவற்றை எதிர்ச்சொல் எனக் காட்டினர் இவை *'இன்னவும்'* என்பதனுள் அடங்கும் கருமை முதலிய நிறங்கள் செம்மை போன்றவே அன்றி எதிரிடையானவை அல்ல என்பது எவரும் அறிந்ததே. சிறுமைக்குப் பெருமையும், சேய்மைக்கு அண்மையும், தீமைக்கு நன்மையும் போலத் தன்மையால் எதிரிட்டவை அல்ல; கருமை முதலியவை ***'செம்மை'* யின் எதிர்ச்சொல் *'கொடுமை'*** என்பதாம். செங்கோல் என்பதை அறிக.

செம்மையாவது நேர்மை; வளையாத் தன்மை

*"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்*
*கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை"*

சிலப்.15·120, 121

என்பது அடிகள் வாக்கு. கோவலர் கைக்கண் உள்ள கோல் ஒரொருகால் அலைப்பது ஆகலின்

*"கொடுங்கோல் கோவலர்"*–(முல்லைப்பாட்டு) என்கிறார் நப்பூதனார். இனி அவர் கைக்கோல் வளைவுடையது என்பதைச் சுட்டுவதுமாம்.

செம்மை செவ்விய தன்மையால் நேர்மை ஆகலின், ***'நடுவு நிலைமை'*** என்பதாம். நடுவு நிலைமையாவது ***ஒரு பால் கோடாமை.***

*"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி"*

என்னும் குறள்மணி, நடுவு நிலைமையை உவமையால் நன்கனம் வலியுறுத்தும். மேலும்,

*"நெடு நுகத்துப் பகல்போல*
*நடுவுநின்ற நன்னெஞ்சினோர்"*

என்னும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் வாக்கும்

*'நுகத்துப் பகலாணி அன்னான்'*

என்னும் பொய்யாமொழியார் வாக்கும்,

*'செம்மையின் ஆணி'*

என்னும் கம்பன் வாக்கும் காணத்தக்கன.

ஒருபால் சாயாத நடுவு நிலைச்செம்மை, *'செப்பம்'* எனவும் பெறும். செப்பம் உடையான் *'செவ்வியான்'* எனப் பெறுவான்

> ***"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா***
> ***உட்கோட்டம் இன்மை பெறின்"***

என்றும்,

> ***"செப்பம் உடையவன் ஆக்கம்"***

என்றும்,

> ***"செப்பமும் நாணும் ஒருங்கு"***

என்றும்,

> ***"செவ்வியான் கேடும்"***

என்றும் வரும் குறள்மணிகளைத் தெளிக.

நேர் கிழக்கைச் *'செங்குணக்கு'* என்றும், சரிவின்றி நிமிர்ந்தெழுந்துள்ள மலையைச் *'செங்குன்று' 'செங்கோடு'* என்றும், நேரிய கூரிய அம்பைச் *'செங்கோல்'* என்றும், நேரிய பார்வையைச் *'செந்நோக்கு'* என்றும், இருவகை வழக்கினும் உண்மை காண்க இவற்றை நோக்க *'செங்குட்டுவன்'* என்பது ***செவ்விய நேரிய–நடுவுநிலை போற்றிய குட்டுவன்*** என்பது போதரும் அகச் சான்று காட்டின் அன்றோ ஏற்கும் எனின் காட்டுதும்

1) *மதுரைச் சாத்தனார்* மலை நாட்டுக்குச் சென்று செங்குட்டுவனைக் கண்டு கோவலற்கு உற்றதும், கண்ணகி வழக்கும், தென்னவர் கோமானும் தேவியும் பட்டதும், கண்ணகி மலைநாட்டுக்கு வந்ததும் ஆகிய செய்திகளை ஒழிவின்றி உரைத்தார் அதனைக் கேட்டவுடன்,

> *"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற...*
> ***செம்மையில் இகந்தசொற்*** *செவிப்புலம் படாமுன்*
> *உயிர்பதிப் பெயர்ந்தமை உறுக வீங்கென*
> *வல்வினை வளைத்த கோலை மன்னவன்*
> *செல்லுயிர் நிமிர்த்துச்* ***செங்கோல் ஆக்கியது"*** 2–95–9

என்று செங்குட்டுவன் கூறும் உரைமணி, அவன் செங்கோல் தெய்வத்திற்குத் தலை வணங்கித் தாழாத் தொண்டியற்றும் தனிப் பேரடியான் என்பதைத் தெள்ளிதின் விளக்கும்

2) மேலும், பாண்டியன் தான் செய்த பழிக்குக் கழுவாய் தானே தேடிக் கொண்டதை வியந்து பாராட்டும் செங்குட்டுவன், ஆள்வோருக்கு உண்டாம் அல்லல்களைக் கூறுமுகத்தான் தன்செங்கோல் நாட்டச் சீர்மையைப் புலம்படுத்துகின்றான்

> *"மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்*
> *பிழையுயிர் எய்திற் பெரும்பேர் அச்சம்*
> *குடிபுர வுண்டுங்* ***கொடுங்கோல் அஞ்சி***
> *மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
> *துன்ப மல்லது தொழுதக வில"*

என்பது அவன் வாக்கு

3) இனி, வடநாட்டின்கண் நிகழ்ந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் நாவினைக் காவாக் கனகன் விசயன் முதலாயவர், *'தென்னாட்டு வேந்தர்*

*இமயத்தில் இலாஞ்சினை பொறித்த நாளில் எம்போலும் வேந்தர் ஈங்கில்லை போலும்'* என்றுரைத்த மொழியைத் துறவோர் வழியாகக் கேள்வியுற்ற செங்குட்டுவன், வடநாட்டின் மேற்படை கொண்டு செல்ல விழைந்திருந்தான். அவ் விழைவைப் *'பத்தினிக் கற்கோள்'* விரைந்து தூண்டிற்று வஞ்சினங் கூறி வட நாட்டுச் செலவு மேற்கொள்கிறான் செங்குட்டுவன்.

வஞ்சினமாவது நெடுமொழி. *'இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்'* (தொல் புறத்.24) என்னும் சிறப்புடையது. வஞ்சினம் உயிரெனப் போற்றும் ஒன்றையோ பலவற்றையோ, சுட்டிக் கூறி வஞ்சினம் கூறப்பெறும் என்பதை இலக்கியம் கற்ற, எவரும் அறிவர். அவ்வாறாகச் செங்குட்டுவன் கூறும் வஞ்சின மொழி யாது?

*"கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது*
*வறிது மீளுமென் வாய்வாள் ஆகிற்*
*செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்*
*பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்*
***குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகென"***

முழங்குகின்றான். *'குடிநடுக் குறூஉம் கோலை'* எவ்வளவு கொடுமையாகக் கருதினான் செங்குட்டுவன் என்பதை விளக்க வேறு சான்று வேண்டுவ தின்றாம்.

4) இனிச் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவினை மேற்கொண்டு கங்கைக் கரைக்கண் இருந்த காலையில், தென்னாட்டினின்று போந்த மாடலன் என்னும் மறையோன், பாண்டிநாட்டு நிலைமையையும், சோணாட்டுச் செய்தியையும் தானே விரித்துரைக்கின்றான். பொழுது போன பின்னர் செங்குட்டுவன் மாடலனை மீண்டும் தானே அழைத்து,

***"இளங்கோ வேந்தன் இறந்த பின்னர்***
*வளங்கெழு நன்னாட்டு மன்னவர் கொற்றமொடு*
***செங்கோற் றன்மை தீதின் றோவென"***

வினவுகின்றான். தன் மைத்துன வளவனுக்கு இருந்த தாயவுரிமைப் போரைத் தகர்த்து அரசாக்கி நிறுத்தியவன் செங்குட்டுவன். அச்செயல் முடித்த பின்னர் வடநாட்டுச் செலவு மேற்கொண்டான் ஆகலின் அச் சோணாட்டுச் *'செங்கோற்றன்மை தீதின்றோ'* என வினவுகின்றான்.

இவ்வினாவினால் தன்னாட்டில் மட்டுமன்றி எந்நாட்டிலும் செங்கோற் றன்மை சீருற விளங்க அவாவியவன் செங்குட்டுவன் என்பது விளக்கமாம்.

5) செங்குட்டுவன் மலைவளங் காணச் சென்ற காலையில் *'ஏழ்பிறப்படியோம் வாழ்க நின் கொற்றம்'* என வீழ்ந்து வணங்கிய குன்றக் குறவர், *'கான வேங்கைக் கீழ் நின்ற காரிகை வானம் போகிய'* இறும்பூது நிகழ்ச்சியைக் கண்டவாறு கூறினர். கலங்கி நின்ற அக்காரிகை சேரர் நாட்டகத்து இவ்வாறு *'அல்லற்பட்டு ஆற்றாது'* அழுங்குவார் இலர் என்று உறுதியாகக் கருதினர்.

*"எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ*
***நின்னாட் டியாங்கண் நினைப்பினும் அறியோம்"***

என்றனர். குன்றுவாழ் மக்களே கோன்முறை கோடாக்கோன்மை தம் நாட்டில் நிகழ்வதாகக் குறிக்கொண்டு வாழ நெறிப்படுத்திய காவலன் செங்குட்டுவன் என்னின், அவன் செங்கோல் சீர்மை என்னே!

6) வஞ்சி மூதூரில் மகிழ்ந்திருந்தான் குட்டுவன். அப்பொழுது எழுந்த முழுமதியைக் கூறவந்த அடிகட்குக் குட்டுவன் குடிபுறந் தரும் கோன்மையே முன்னின்றது. ஆகலின்,

*"முடிபுறந் தருங்கால் திருமுகம் போல*
*உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்"*

என்றார். செங்குட்டுவன் குடி புறந்தரூஉம் செங்கோன்மையை விளக்கும் உவமையாகலின் கருதத் தக்கதாம்.

(7–8) செங்குட்டுவனை விளியாக *'அறக்கோல் வேந்தே'* (28:96) என்றும், *'செங்கோல் வேந்தே'* (28:157) என்றும் அடிகளார் கூறியுள்ளமையும், அவன் அவையத்தைச் *'செங்கோல் வேந்தன் திருவிளங்கு அவையம்'* (2:144) என்று கூறியுள்ளமையும் நோக்குதற்குரியன.

9) செங்குட்டுவற்கும் இளங்கோவடிகட்கும் உழுவலன்பு பூண்ட முத்தமிழ் ஆசான் சாத்தனார், மணிமேகலை வஞ்சி மாநகர் புக்க காலையில் ஆங்கு ஆட்சி புரிந்தவன்,

*"செங்குட்டுவன் எனும் செங்கோல் வேந்தன்"* (26:77) என்று குறிக்கின்றார். இவ்வாற்றால் எல்லாம் செங்குட்டுவன் என்பதும், அவன் செங்கோற் குட்டுவன் என்பதும் தெளிவாம்.

இஃதிவ்வாறாக, 'நம்சேரல் பெருந்தகை குட்டுவன் எனத் தனித்தும் வழங்கப்படுவன்; இவனுக்குரிய அடைச் சொல்லாகிய செம்மை **இவனது நிறம் பற்றி வழங்கப்பட்டதாகும்.** இது பற்றியே, மணிக்குட்டுவன் என்றும் இவன் வழங்கப் பெற்றவன் என்று சாசனமொன்றால் தெரிகின்றது என ***சேரன் செங்குட்டுவன்*** ஆசிரியர் ***மு.இராகவர்*** கூறியுள்ளார். மேலும் நாமக்கல் சாசனத்தில் சேரரின் முன்னோருள் *'மணிக் குட்டுவன்'* என்பவனும் ஒருவனாகக் காணப்படுகின்றான் என்றும், அவன் நன்னூல் மயிலைநாதர் உரையில் காட்டப்பெறும் திருமணக்குட்டுவன் ஆகலாம் என்றும் மணக்குட்டுவன் என்றும் கொள்ளத்தகும் என்றும், அதற்கு மணத் தக்காளி மணித் தக்காளி என வழங்குவது சான்று என்றும், மணி என்பது ஈண்டுச் செம்மணியான மாணிக்கமாம் என்றும் கூறியுள்ளார். புறச் சான்றுகளைத் தேடிப் படைத்துச் செங்குட்டுவன் பெயர்க்கு ஆக்கி நிறத்திற்கு நிறுவுதலினும் அகச் சான்றுகள் நிரம்பிக் கிடக்கும் நேர்மை அடையைப் புறக்கணிக்க இயலாது என்பதறிக. மணித்தக்காளியே பெயர்! மணத்தக்காளி என்பது வழுவழக்கு. மணி–சிறியது. மணிக்குடல், மணிக்கொச்சம் அறிக.

மணிக்குட்டுவன் அல்லது மணக்குட்டுவனே என்பதைத் தக்க சான்று இன்றிக் கொள்ளுதற்கு இயலாது. அதனையே கொள்ளு வதற்கியலாத போது, *அவன் நிறத்தைக் கோடல் என்பது சிறிதும் இயலாததாம்.*

இனி, *'மணி'* என்பது செம்மணி என்று மட்டும் குறிக்கும் என்பதன்று. அது செம்மணியையும் குறிக்கும். கருமணியையும் நீலமணியையும் பச்சை மணியையும் பிற மணிகளையும் குறிக்கும்.

*'மணிவண்ணன்'* என்பது திருமாலைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. *'மணி'* ஆண்டுச் செம்மணியாமோ? அது கருமணியாம்! *'கருமணியைக் கண்டு கொண்டேன்'* *''கருமணியைக் கோமளத்தை''* என்பது ஆழ்வார் உரைமணிகள். *'கருமணியிற் பாவாய்'* என்பது வள்ளுவர் வளமணி. ஆகலின் *'மணி'* செம்மணி என்றே கோடல் சால்பன்று; இடத்தையும் பொருளையும் கருதி ஏற்ற பொருள் தருவதாம் அது. அவ்வாறாகக் குட்டுவனின் உடன் பிறந்தாராய அடிகளாரோ உழுலன்பராய சாத்தனாரோ தன் மைந்தன் குட்டுவன் சேரற்கு நல்லாசிரியராகத் தேர்ந்து கொண்ட ஐந்தாம் பத்துப் பாடிய பரணரோ செங்குட்டுவன் நிறத்தை அடைமொழியால் கூட– உவமையால் கூட– காட்டினர் அல்லர். செங்கோற்றன்மையைச் செம்மாந்து பல்கால் பாராட்டியுள்ளனர். ஆதலால் செங்குட்டுவன் நிறம் செம்மை கருமை இவற்றுள் யாதாயினும் ஆகுக! அஃதவற்குப் பெருமை தரும் ஒன்றன்று. அவன் ***செங்கோன்மையே உண்மைச் சான்றுடையதும் பெருமை மிக்கதும் ஆம்*** *என்க.*

நிற அடை என்றால் தான். அவன் பிள்ளைமைப் பருவத்தே இடம் பெற்றிருக்கக் கூடும். தன்மை அடை எனின், அரசேற்று நாடெல்லாம் செங்கோற்றன்மை பெருகப் பரவிய பின்னரே ஏற்பட்டிருக்கக் கூடும் என்று எண்ணிப்பார்க்க வேண்டுவதும் முறைமை. அதற்குத் தக்க குறிப்பொன்றும் உள்ளது.

பதிற்றுப்பத்தில் உள்ள ஐந்தாம் பத்து பரணரால் பாடப்பெற்றது. செங்குட்டுவன் ஐந்து இடங்களில் **42, 43, 46, 47, 49** குட்டுவன் என்றே குறிக்கப் பெற்றுள்ளான். செங்குட்டுவன் முற்பகுதி வரலாற்றைக் கூறுவது அது என்பதும், சிலப்பதிகாரம் அவன் பிற்பகுதி வரலாற்றைக் கூறுவது என்பதும், இவ்விரண்டையும் தொகுத்துச் சுட்டுவது பதிற்றுப்பத்து ஐந்தாம் பதிகம் சிலப்பதிகாரம் அவன் பிற்பகுதி வரலாற்றைக் கூறுவது என்பதும், *'கிழவர் இளங்கோ'* என்னும் கட்டுரைக் கண் குறிக்கப் பெற்ற செய்தி இவண் நோக்கத் தக்கதாம்.

குட்டுவன் என்னும் குடிப்பெயர் தாங்கியவன் தன் செங்கோற் சீர்மையால் செங்குட்டுவன் ஆகிப் புலவர் பாடும் புகழாளனாகத் திகழ்ந்தான் என்பது உறுதியாம். காந்தி என்று அழைக்கப் பெற்ற பெரியார், பின்னை நாளில் ***'மகாத்மா காந்தி'*** என்று போற்றப் பெற்றமை கண்கண்ட சான்று அன்றோ!

# இராமானுசரும் தமிழும்

பேராசிரியர் **ப.மருதநாயகம்,**
ஆய்வு அறிஞர்,
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்,
தரமணி, சென்னை–600 113
கைபேசி 94427 87727
மின்னஞ்சல் · pmarudanayagam@yahoo com

இராமானுசர் வடமொழியில் எழுதிய ஒன்பது நூலகள் வேதாந்த ஸங்கிரஹம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்த சாரம், கீதா பாஷ்யம், *சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம்,* நித்ய கிரந்தம் என்று அழைக்கப்பெறும். சில வேத வாக்கியங்களின் பொருளைத் தருவது ***வேதார்த்த ஸங்கிரஹம்.*** வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரங்களுக்கு விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டினை ஒட்டிய விளக்க உரை ***ஸ்ரீபாஷ்யம்.*** பிரம்மசூத்திரங்களுக்கு உரைகளைக் கொண்ட சிறிய நூல் ***வேதாந்த தீபம்.*** அவையிரண்டையும விட மிகச் சுருக்கமான உரைநூல் ***வேதாந்த சாரம்.*** பகவத் கீதைக்கு விசிஷ்டாத்வைதத்தை ஒட்டிய உரை ***கீதாபாஷ்யம்.*** திருவரங்கனுக்கும் இராமானுசருக்கும் நடக்கும் உரையாடல் வடிவில் சரணாகதி தத்துவத்தை விளக்குவது ***சரணாகதி கத்யம்.*** இராமானுசர் திருவரங்கனிடம் சரணாகதி அடைவதுபோல் அமைந்த தோத்திரநூல் ***ஸ்ரீரங்க கத்யம்.*** சரணாகதியின் பயனான வைகுண்டத்தை வருணிப்பது ***ஸ்ரீவைகுண்ட கத்யம்.*** மாந்தர் நாள்தோறும் மேற்கொள்ள வேண்டிய பூசை, சந்தியாவந்தனம் போன்றவற்றை விவரிப்பது ***நித்ய கிரந்தம்.***

இராமானுசரின் விசிஷ்டாத்வைதம் கீழ்க்கண்ட கருத்துக்களை முன்னிறுத்தும் ·

1) அறிவுடையவை, அறிவற்றவை ஆகிய இரண்டு வகையானவற்றையும் தனது உடலாகக் கொண்டவன் இறைவன்; அவனே அவற்றை அடக்கி ஆள்கிறான்.
2) நாம் பிறப்பு, இறப்பு போன்ற துன்பங்களில் உழல்வதற்கு அவனுடைய கட்டளைகளை மீறி நடந்ததால் அவனுக்கு ஏற்பட்ட சினமே காரணமாகும்
3) இறைவனிடம் சரணாகதி அடைவோமானால் அவன் அருளால் மோட்சம் என்னும் வைகுண்டத்தை அடையலாம்

இராமானுசர் தமிழில் ஏதும் எழுதவில்லையாயினும், அவர் கையாண்ட வடமொழியில் தமிழ் ஏற்படுத்திய தாக்கம் பற்றியும், அவருடைய கோட்பாடுகளின் உருவாக்கத்தில் ஆழவார்பாடல்களின் பங்களிப்புப் பற்றியும் அவரைக் கவர்ந்த நம்மாழ்வார் பாடல்களில் சங்க இலக்கியச் செல்வாக்குப் பற்றியும் அவருக்குப் பின் வந்த வைணவ ஆச்சாரியார்கள் தமிழுக்குப்பட்டிருக்கும் கடன் பற்றியும் தமிழும் வடமொழியும் அறிந்த அறிஞர்கள் தந்துள்ள ஆய்வுக்கட்டுரைகள் பல

(1)

தென்னிந்தியர்களாகிய சங்கரர், சாயணர், இராமானுசர் போன்றோர் கையாளும் வடமொழி சில கூறுகளில் வட இந்திய அறிஞர்கள் கையாளும்

வடமொழியினின்றும் வேறுபடுகின்றதென்றும் இவ்வேறு பாட்டிற்கு முன்னவர் மொழியில் தமிழின் தாக்கமே காரணமென்றும் ஏ.சி.பர்னல் (A.C. Burnell) எனும் ஜெர்மானியக் கல்வியாளர் தமது *The Aindra School of Sanskrit Grammarians* (1875) என்னும் பெயருடைய சிறு ஆய்வு நூலில் குறிப்பிடுவார்.

The authors of North India have (except in verse) preserved a good deal of the primitive terseness of the oldest Sanskrit prose; the writers of the South (e.g., Sankaracharya and Sayana) are, on the other hand, remarkable for excessively involved long sentences chiefly constructed by the aid of `iti' which is there used just like the Tamil `enru'. The effect of these influences is very remarkably evident in the dialects now spoken by tribes which have emigrated from north to south India. (ப.74).

'என்று' என்னும் சொல்லைக் கையாண்டு நீண்ட வாக்கியங்களைத் தமிழில் எழுதுவதைப் போன்று, வடமொழியில் 'இதி' என்னும் சொல்லைப் பயன்படுத்தி மிக நீண்ட முற்றுத் தொடர்களை இச்சமய ஆச்சாரியார்கள் எழுதியது வடமொழி மரபிலிருந்து மாறுபட்டதாகும்.

இராமானுசரின் விசிஷ்டாத்துவைதக் கோட்பாட்டை உருவாக்க அவர் ஆழ்வார் பாடல்களுக்குக் கடன்பட்டிருக்கிறார் என்பதை எஃப். டபிள்யூ. எல்லிஸ் (F.W. Ellis) தமது திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில் தெளிவுபடுத்துகிறார். "கடவுள் வாழ்த்து" அதிகாரத்தில் வரும் குறள்களை விளக்கும்போது, *திருவாய்மொழி*யிலிருந்து,

> *'நீராய் நிலனாய்த்' தீயாய்க் காலாய் நெடும் வானாய்ச்*
> *சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனாய்க்*
> *கூரார் ஆழி வெண்சங்கேந்திக் கொடியேன் பால்*
> *வாராய் ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே.'* (30)
> *'உயர்வற வுயர்நலம் உடையவன் எவனவன்*
> *மயர்வறு மதிநலம் அருளினன் எவனவன்*
> *அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்*
> *துயரறு சுடரடி தொழுதெழல் மனனே'* (31)

எனும் பாடல்களை ஆங்கில மொழி பெயர்ப்போடு தந்து திருவாய்மொழி வைணவ தத்துவமான விசிஷ்டாத்துவைதக் கருத்திற்கு மூலநூல் என்றும் திருவாசகத்தில் வரும்,

> *"உரை யுணர்விறந்து நின்ற தோருணர்வே"*
> *"இணங்கிய எல்லா உயிர்கட்கும் உயிரே"*
> *"இறைவனே நீ என்னுடலிடம் கொண்டாய்"*
> *"நிரந்த ஆகாய நீர்நிலம் தீகால்*
> *ஆயவையாய் அல்லையாய் ஆங்கே*
> *கரந்ததோர் உருவே"*

போன்ற வரிகளில் அத்துவைதத் தத்துவம் பொதிந்து கிடக்கிறது என்றும் எடுத்துக்காட்டுகளோடு நிறுவுவார். விசிஷ்டாத்துவைதமும் அத்துவைதமும் வேறுபட்ட தத்துவங்களாயினும் அவற்றைச் சார்ந்த மக்களின் நம்பிக்கையும்

ஒழுகலாறும் தென்னகத்தில் ஒரு தன்மையவையே என்று எல்லிஸ் கூறுவது வியப்புக்குரிய உண்மையாகும்.

இராமானுசர் தமது கீதாபாஷ்யத்தில் கண்ணனின் பண்பு நலன்களைச் சுட்டும்போது கீதையில் இல்லாத அடைமொழிகள் பலவற்றைத் திருமாலுக்குச் சேர்க்கிறார். இவற்றில் திருமாலைப் போற்றும் பரிபாடலின் செல்வாக்கைக் காணலாம். புறநானூற்றுப்பாடல் ஒன்றிலிருந்தும் இராமானுசர் ஓர் அரிய உருவகத்தை எடுத்துக் கொள்வார். அதியமானைப் பாடும் அவ்வையார் அவன் புலவர்க்கு இனியனாகவும், பகைவேந்தர்க்கு இன்னாதவனாகவும் இருப்பதை,

*"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்*
*நீர்த்துறை படியும் பெருங்களிறு போல*
*இனியவை பெரும எமக்கே மற்றதன்*
*துன்னரும் கடாஅம் போல*
*இன்னாய் பெருமநின் ஒன்னாதோர்க்கே"* (புறம் 94)

என்று பாராட்டுவார். திருமால் அடியாரிடத்து எளியனாகவும் அவனை வேண்டாதாரிடத்து நெருங்குதற்கு அரியனாகவும் இருப்பதை இவ்வுவமையைச் சற்று மாற்றம் செய்து விளக்குவார் இராமானுசர்.

*ஒரு யானை மீது ஏறு என்று ஒரு நொண்டி மனிதனுக்கு*
*நீ கட்டளையிட்டால் அவனால் எப்படி அதனைச் செய்ய*
*முடியும்? அதுபோல, இந்தக் குறையுடைய உலகில்*
*உள்ள ஓர் அற்பமான ஆன்மா எல்லாவற்றிற்கும்*
*தலைவனான இறைவனை எவ்வாறு அணுகமுடியும்?*
*இதற்கு விடை யானை தானாகவே மண்டியிட்டுக்கீழே*
*அமருமானால் நொண்டியால் யானை மீது ஏறிவிட*
*முடியும் என்பதே.*

ஜான் கார்மென் (John B.Carman) தமது ***இராமானுசரின் இறையியல்*** (The Theology of Ramanuja : An Essay in Interreligious Understanding) என்ற நூலில் இவ்வுவமையைப் பாராட்டியெழுதுவார்.

விசிஷ்டாத்துவைதம் ஆத்மாவை இருபத்து நான்கு ஆன்மதத்துவங்களிலிருந்து வேறுபடுத்திப் புருஷன் என்று வரையறை செய்யும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து ஞானேந்திரியங்கள், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஆகிய ஐந்து கன்மேந்திரியங்கள், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகள், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணங்கள் ஆகிய இருபத்து நான்கையும் கொண்டது பிரகிருதி. இக்கருத்தை நம்மாழ்வார் ஒரு பாடலில் சொல்லக் காணலாம்.

***"மங்கவொட்டு உன் மாமாயை திருமாலிருஞ்சோலை மேய***
***நங்கள்கோனே! யானேநீயாகி என்னை அளித்தானே***
***பொங்கைம் புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்***
***இங்குஇவ் வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே.***
(10-7-10)

இறைவனின் அருளினால் ஆத்மனின் தன்மையைத் தான் அறிந்து கொண்டதை நம்மாழ்வார் இன்னொரு பாடலில எடுத்துரைப்பார்.

*"நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு அதனுள் நேர்மை அது இது என்று*
*ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது உணர்ந்தும் மேலும் காண்பரிது*
*சென்று சென்று பரம்பரமாய் யாதும் இன்றித் தேய்ந்தற்று*
*நன்று தீதென்று அறிவரிதாய் நன்றாய் ஞானம் கடந்ததே".*

(8-8-5)

இறுதி இலக்காகிய இறைவனை அடைதற்கு எளியவழி அவனடியில் சரண் அடைதல் (பிரபத்தி) என்று வைணவம் கூறும். இது குறித்த நம்மாழ்வார் பாடல்கள் பலவாயினும் ஆறாம்பத்தில் உள்ள பாடல் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும்

*அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை உறை மார்பா*
*நிகரில் புகழாய் உலகம் மூன்று உடையாய் என்னை ஆள்வானே*
*நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத் தானே*
*புகல் ஒன்றில்லா அடியேன் உன்னடிக் கீழ் அமர்ந்துபுகுந்தேனே*

(6-10-10)

இறைவனடியில் சரண் அடைவதன் சிறப்புப் பற்றியும் அதன் இன்றியமையாமை பற்றியும் ஆழ்வார்கள் பலரும் பாடியிருக்கக் காணலாம். கம்பரின்

*உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்*
*நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டுடையார் அவர்*
*தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே*

என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் ஆழ்வார் பாடல்களின் தாக்கத்தால் ஆக்கம் பெற்றதே

பகவத் கீதையின் பனிரண்டாம் அத்தியாயத்தின் பத்தாம் பாடல், "உன்னால் எப்பொழுதும் என்னைத் தியானித்திருக்க முடியவில்லை யானால், எனக்கான பணிகளைச் செய்வதில் ஈடுபடுவாயாக! அப்பணிகளைச் செய்வதன் மூலமும் நீ முழுமையுறலாம்" என்று கண்ணன் பார்த்தனிடம் கூறுவதாகப் பொருள் தரும். இதை விளக்கும் இராமானுசர், இறைவனுக்குச் செய்யும் பணிகளைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துச் சொல்வார்:

கோயில்கள் கட்டுவது, கோயிலில் பூந்தோட்டங்களை வைப்பது, விளக்கேற்றுவது, தரையைக் கூட்டுவது, தண்ணீர் தெளிப்பது, தரையை மெழுகுவது, இறைவனின் சிலையை அணி செய்யப் பூக்களைச் சேர்ப்பது, இறைவனைத் தொழுவது, இறைவனின் பெயர்களைச் சொல்வது, கோயிலை வலம் வருவது, இறைவனைப் புகழ்வது, சிலையின் முன் விழுந்து வணங்குவது.

இறைவனுக்கான இத்தகைய பணிகளைத் திருநாவுக்கரசர் சுட்டியிருக்கக் காணலாம். கோயிலில் திருமெழுக்கு, திருமாலை கட்டுதல், திருவிளக்கிடுதல், பாடல் இசைத்தல் ஆகியவற்றை,

*விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்*
*துளக்கில் நன்மலர் தொடுத்தார் தூய விண்ணேறலாகும்*
*விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்*
*அளப்பில, கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே*
4:77:3)

என்று அப்பர் பாடல் பட்டியலிடும். மேலும் இறைவன் அடியார்கள் அவனை மகிழ்விக்கச் செய்ய வேண்டிய எளிய பணிகளைப் பல பாடல்களில் அப்பர் தொட்டுக் காட்டுவார்.

*புக்க ணைந்து புரிந்திலர் இட்டிலர்*
*நக்கணைந்து நறுமலர் கொய்திலர்* (6163)
*அலகு நீருங்கொண் டாட்டித் தெளிந்திலர்*
*திலக மண்டலம் தீட்டித் திரிந்திலர்* (6164)
*ஆப்பி நீரோடு அலகுகைக் கொண்டிலர்*
*பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்* (6165)
*நெய்யும் பாலும் கொண்டாட்டி நினைந்திலர்*
*பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்* (6166)
*மரங்கள் ஏறி மலர் பறித்திட்டிலர்*
*நிரம்ப நீர்சுமந்தாட்டி நினைந்திலர்* (6168)

ஆண்டாளின் திருப்பாவையில் கீழ்க்கண்ட அடிகளைக் காணலாம்:

*தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்* (5)
*மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
*நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்* (9)

இறைவனைப் பூக்களை வைத்து வழிபடுவது வடவர்மரபன்றென்பதும் வடநூல்களில் இத்தகைய பணிகள் விதந்து கூறப்படவில்லை யென்பதும் இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டிய செய்திகள்.

(2)

திருவரங்கத்தமுதனாரின் *இராமானுச நூற்றந்தாதி* இராமானுசர் காலத்திலேயே எழுதப்பெற்றதென்றும் அவர் அப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தாரென்றும் கூறுவர். இராமானுசர் முத்தமிழறிஞர் என்று திருவரங்கத்தமுதனாரால் பாராட்டப் பெறுகின்றார்.

*சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லை*
*இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன் எண்ணருஞ்சீர்*
*நல்லார் பரவும் இராமானுசன் திருநாமம் நம்பிக்*
*கல்லார் அகலிடத்தோர் எது பேறென்று காமிப்பரே.* (44)

சொல் நிரம்பிய இயல், இசை, நாடகம் என்கின்ற ஒப்பற்ற முத்தமிழையும் சுருதிகள் நான்கையும் எல்லையற்ற அறநூல்களையும் எல்லாக் கலைகளையும் அறிந்தவர் இராமானுசர் என்று இப்பாடலில் அவர் போற்றப்படுகிறார்.

*கூறும் சமயங்கள் ஆறும் குலைய குவலயத்தே*
*மாறன் பணித்த மறை உணர்ந்தோனை மதியிலியேன்*
*தேறும்படி என்மனம் புகுந்தானைத் திசையனைத்தும்*
*ஏறும் குணனை இராமானுசனை இறைஞ்சினமே.* (46)

புறச்சமயங்கள் ஆறும் நிலைகுலையுமாறு இவ்வுலகில் நம்மாழ்வார் அருளிச் செய்த தமிழ்மறையாகிய *திருவாய்மொழியைக்* கற்றறிந்தவர் என்று இராமானுசர் குறிப்பிடப்படுகிறார்.

*பண்தரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய்*
*விண்டிட எங்கள் இராமானுசமுனி வேழம் மெய்ம்மை*
*கொண்ட நல்வேதக் கொழுந் தண்ட மேந்திக் குவலயத்தே*
*மண்டி வந்தேன்றது வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே.*
(64)

இராமானுசராகிய மதயானையானது, நம்மாழ்வார் பண்களால் சிறப்புறுமாறு அளித்த செந்தமிழான ***திருவாய்மொழியால்*** விளைந்த கழிபேருவகையைப் பெருகும் மதநீராகவும் உண்மைநெறிகளைக் கொண்ட வேதத்தைத் தடியாகவும் கொண்டு புறச்சமயத்தினராகிய உங்களை எதிர்த்து நிற்கிறது; உங்கள் வாழ்வு அழிந்தது.

இவ்வாறு திருவரங்கத்தமுதனார் தமது இராமானுச நூற்றந்தாதியில் இராமானுசர் முத்தமிழிலும் ஈடுபாடுடையவர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ***ஆறாயிரப்படி குருபரம்பரா பிரபாவம்*** அவர் திருவரங்கப்பெருமாள் அரையரிடமிருந்து திருவாய்மொழிப் பாடல்களைப் பண்ணிசை தாளத்தோடு பயின்று கொண்டார் என்று கூறும். திருவரங்கப் பெருமான் அரையருக்கே திருவாய் மொழிப் பாடலொன்றை நடனக் காட்சியாகத் தரும்போது செய்ய வேண்டிய திருத்தங்களை இராமானுசர் சொன்னாரென்று அவரது வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சி ஒன்று சொல்லப்படுகிறது. சுகந்தி கிருஷ்ணமாச்சாரி தமது ஆங்கிலக் கட்டுரையில் இராமானுசர் தத்துவவிற்பன்னராக இருந்ததோடல்லாமல் இசை, நடனம் ஆகிய கலைகளின் மூலமும் வைணவத்தைப் பரப்பும் வழிகளையும் தொடங்கிவைத்தார் என்பதற்கான சான்றுகள் சிலவற்றைத் தருவார்.

*அன்னையென் செய்யிலென் ஊர்என் சொல்லில் என் தோழிமீர்*
*என்னை இனி உமக்கு ஆசையில்லை அகப்பட்டேன்*
*முன்னை அமரர் முதல்வன் வண் துவராபதி*
*மன்னன் மணிவண்ணன் வாசுதேவன் வலையுளே.* (5:3:6)

இப்பாடலில் வாசுதேவனின் வலையில் தான் அகப்பட்டதாகத் தலைவி வேதனையுறுவாள். இப்பாடலுக்கான அரையர் நடனத்தில் மீன்வலையை விரிக்கும் காட்சி இடம்பெற்றதென்றும் இராமானுசர் வாசுதேவனின் கவர்ச்சியுடைய கண்களைக் காட்டுமாறு அரையருக்கு அறிவுரை கூறினார் என்றும் சொல்வர்.

கவர்ச்சியுடைய கண்களைக் காட்டுமாறு அரையருக்கு அறிவுரை கூறினார் என்றும் சொல்வர்.

வெங்கடாச்சாரி எழுதிய `Tamil as a Vehicle of Revelation' என்னும் ஆங்கிலக் கட்டுரை வைணவக் கோட்பாட்டின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும், பரப்புதலிலும் ஆழ்வார் பாடல்கள் செய்த பங்களிப்பைத் தொட்டுக் காட்டுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆழ்வார் பாடல்களை நாதமுனி தொகுத்தளித்த பின்னரே அவை தமிழ் உலகிற்கு நன்கு அறிமுகமாயின. நாதமுனியின் பேரனாகிய யமுனா அவரது ***ஸ்தோத்ர ரத்னா***வில் வியாசரோடும், பராசரரோடும் இணைத்து நம்மாழ்வாரின் பெருமையைப் பேசுகிறார். அவர் குலசேகராழ்வாரின் பாடல் ஒன்றையும் வடமொழியில் தருவதைக் காணலாம் இராமானுசர் தமிழில் ஏதும் எழுதவில்லையாயினும் அவர் சொன்ன சமயக் கருத்துக்கள் பலவும் அவர் தந்த விளக்கங்களும் தமிழில் ஆழ்வார் பாடல்களில் உள்ளன. இதனால் அவர் சமயக் கோட்பாடுகளையும் அறிவுரைகளையும் தமிழில் எழுதவில்லையாயினும் தமது சொற்பொழிவுகளில் தமிழைப்பெரிதும் பயன்படுத்தியிருப்பார் என்பதை அறியலாம் என்று வெங்கடாச்சாரி எடுத்துரைப்பார் இராமானுசரின் சீடர்கள் அவருடைய எண்ணங்களைத் தமிழிலுள்ள ஆழ்வார் பாடல்கள் கூறுவனவற்றோடு பொருத்திக் காட்டி விளக்கினார்கள். இது சமய நூல் வரலாற்றில் ஒரு புதிய பாதை தோன்றக் காரணமாயிற்று.

பெரிய வாச்சான் பிள்ளை தமிழ் மொழியிடம் பற்றும் பெருமதிப்பும் உடையவர். அவர் வடமொழியினும் தமிழையே உயர்ந்த இடத்தில் வைத்தார். ("He even placed it on a higher pedestal in his estimation than Sanskrit"). திருமங்கை ஆழ்வாரின் ***பெரிய திருமொழி***யில் வரும் ஒரு பாடல் (7–8–7) *'செந்தமிழ்'* என்ற சொல்லைக் கையாளுகிறது. இதற்கு விளக்கம் தரும் பெரியவாச்சான்பிள்ளை, *"செந்தமிழ் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம் அது எப்பொருளையும் ஐயத்திற்கு இடமற்ற சொற்களால் விளக்குவதாலாகும்"* என்று குறிப்பிடுவார் ***பெரிய திருமொழியிலேயே*** வரும் இன்னொரு பாடல் (2–8–2) *'செந்தமிழ் பாடுவார் வணங்கும் தேவர்'* என்று இறைவனைப் போற்றுகிறது. இது "முதல் மூன்று ஆழ்வார்களைப் போன்றோரின் தூய, கலப்பில்லாத தமிழில் வணங்கப்பெறும் கடவுள்" என்று பொருள்படுமென்றும் "அக்கடவுளின் இறைமைத் தன்மை தூய தமிழில் இத்தகைய பெருமைக்குரிய ஆழ்வார்களால் பாடப்படுவதால் மேலும் உயர்கிறதென்றும்" பெரியவாச்சான்பிள்ளை வியந்து பேசுவார்

திருமங்கையாழ்வார் இயற்றிய ***திருநெடுந்தாண்டகம்,*** நான்காம் பாடலில் இறைவனை,

*இந்திரர்க்கும் பிரமர்க்கும் முதல்வன் தன்னை*
*இருநிலம் கால் தீ நீர் விண்பூதம் ஐந்தாய்*
*செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்*
*திசை நான்குமாய் திங்கள் ஞாயிறாகி*
*அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா*
*அந்தணனை அந்தணர் மாட்டந்தி வைத்த*
*மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும்*
*வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே*

என்று வழுத்தும். "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" என்னும் தொடர் "செவ்விய தமிழ் ஓசையும் வடசொல்லும் உருவெடுத்த திருமால்" என்று பொருள்படும். பெரியவாச்சான்பிள்ளையின் காலத்திலேயே இதற்குச் சிலர், தமிழ் வடமொழியிலிருந்தே தோன்றியதென்றும் அதனை முதலில் சொல்லியிருக்கக் கூடாதென்றும் தம் எதிர்ப்பை வெளியிட்டனர். அப்பேரறிஞர் அவர்களுக்கு விடைசொல்லும் வகையில் தமது விளக்கவுரையில் அவர்கள் கூற்று அறிவற்றதென்றும் தமிழ் வடமொழியைச் சார்ந்திராது தனித்தியங்கவல்ல மொழியென்றும், அதன் சொற்கள் பொருளைத் தெளிவாகவும் ஐயத்திற்கு இடமின்றியும் குறிக்க வல்லவையென்றும் எழுதுவார். தமிழில் உள்ள ஆழ்வாரின் சொற்கள் தாமே பொருளை விளக்கக் கூடியவையென்றும் வடமொழி வேதங்களைப் போல் புராணங்களையும் இதிகாசங்களையும் நம்பியிருப்பவை அல்லவென்றும் அவர் தரும் விடை பெரும் பாராட்டிற்குரியது. சமஸ்கிருதத்தை ஏன் வடசொல்லென்று ஆழ்வார் சுட்டியுள்ளார் என்பதையும் பெரியவாச்சான்பிள்ளை தெளிவுபடுத்துவார். திருப்பதி மலைக்கு வடக்கிலுள்ள பகுதியில் சமஸ்கிருதமே புரிந்து கொள்ளப்பட்டதென்றும் அதற்குத் தென்பகுதியில் தமிழும் சமஸ்கிருதமும் புரிந்துகொள்ளப்பட்ட தென்றும் சமஸ்கிருதத்தைத் தமிழிலிருந்து வேறுபடுத்திக் காட்டவே அதனை வடசொல்லென்று ஆழ்வார் குறிப்பிட்டாரென்றும் தரப்படும் விளக்கம் உண்மை நிலையை உணர்த்துவதாகும்.

தமிழின் உட்பகைவர்களும் புறப்பகைவர்களும் வடமொழிக்கு ஆதரவாகவும் தமிழுக்கு எதிராகவும் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே பேசி வந்த நிலையில், அந்நூற்றாண்டில் வாழ்ந்த நஞ்சீயர் அவர்களுக்கெல்லாம் தக்க சாட்டையடி கொடுத்தார். அத்தீயோர் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளைத் தமிழுக்கு எதிராக வைத்தனர்:

1) தமிழ் ஒரு தூய்மையற்ற மொழியாகும்.

2) கீழ்த்தட்டு மக்களும் தமிழில் எழுதப்பெறும் சமய இலக்கியங்களைப் படிப்பதால் அவற்றின் புனிதத்தன்மை கெட்டுவிடும்.

3) திருவாய்மொழிப் பாடல்களை இயற்றிய நம்மாழ்வார் நான்காம் வருணத்தைச் சேர்ந்த ஒரு 'சூத்திரர்'.

4) தமிழ் ஒரு வட்டார மொழி யென்பதால் சமஸ்கிருதத்தைப்போல் இந்தியா முழுவதிலும் புரிந்து கொள்ளப்பட முடியாததாகும்.

5) வேதங்களில் நம்பிக்கையற்ற அவைதிகர்களாகிய பௌத்தரும் சமணரும் அவர்களுடைய கொள்கைகளைப் பரப்பத் தமிழையே கையாளுகின்றனர்.

6) வைணவ சமயத்தாரின் பாடல்களும் நூல்களும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களைப் பற்றியும் பேசாமல், காமத்தையும் மோட்சத்தையும் பற்றியே பேசுகின்றன.

7) ஆழ்வார்களின் பாடல்கள் நாயக–நாயகி பாவத்திற்குத் தலைமை இடம் தருவதால் புனிதப்பாடல்கள் காமவுணர்வுகளைத் தூண்டவே பயன்படுகின்றன.

நஞ்சீயர் தமது ***ஒன்பதினாயிரப்படி*** என்னும் விளக்கவுரையில் இவ்வீணர்களின் வினாக்களுக்குத்தரும் விடைகள் வருமாறு:

1) தமிழ் விலக்கப்பட வேண்டிய, தூய்மையற்ற மொழியென்பது முட்டாள்தனமான முடிவாகும். தமிழானாலும், சமஸ்கிருதமானாலும், வேறு எம்மொழியானாலும் இறைவனைப் போற்றுதற்கு ஏற்ற மொழியாகும். மச்ச புராணத்தில் ஒரு கதை சொல்லப்பட்டுள்ளது. மன்னன் ஒருவன், கைசிகன் என்னும் பக்தன் வடமொழியல்லாத ஒரு மொழியில் இறைவனைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டு அவனை நாடு கடத்த வேண்டுமென்று விரும்பினான். மரணதேவதையாகிய யமன், மன்னனுக்கு அவனது எண்ணம் தவறானதென்றும் எம்மொழியும் இறைவனுக்கு நன்மொழியேயென்றும் அறிவுரை கூறினானென்று அக்கதை சொல்லும்.

2) *'கீழ்க்குலத்தார்'* படிப்பதால் சமயநூல்கள் புனிதத்தன்மை இழப்பதில்லை. அதற்கு மாறாக, உலக நன்மைக்கு இத்தகைய சமயப்பிரச்சாரமே பெருந்துணை செய்யும்.

3) ஒருவன் *'கீழ்ச்சாதியில்'* பிறந்தானென்பது அவனது குற்றமாகாது. அவனுடைய கல்வியறிவும் அறவுணர்வுமே அவனுக்குப் பெருமை சேர்ப்பவை. ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் *'கீழ்ச்சாதி'* ஒன்றில் பிறந்தவராக இருக்கலாம். ஆனால் அவருடைய கல்வியும் பண்புநலன்களும் இறைவனைக் கவர்ந்து, அவருக்குப் பணிசெய்து அவரது பேரறிவைப் பகிர்ந்து கொள்ளும் ஆவலையும் இறைவனுக்கே ஏற்படுத்தியதை நாம் உணரவேண்டும்.

4) தமிழ் ஒரு வட்டார மொழியாகலாம். ஆனால் இந்தியாவின் பிறபகுதிகள் யாவற்றிலும் உள்ள உண்மையான அறிஞர்கள் யாவரும் தமிழ் அறிந்தவர்கள். தமிழறியாத சில அறிஞர்களும் அதனைப் புரிந்து கொள்ளும் பேறு தமக்குக் கிட்டவில்லையென்று வருந்துகிறார்கள்.

5) பௌத்தர், சமணர் போன்ற வைதிகர் அல்லாதாரும் தங்களது சமயப்பிரச்சாரத்திற்கும் தமிழைப் பயன்படுத்திக் கொள்வது தமிழின் பெருஞ்சிறப்பை உணர்த்தும்.

6) ஆழ்வார் பாடல்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பற்றியும் விரிவாகப் பேசாதது ஒரு குறையாகாது. மக்கள் வீடுபேறு அடைய வழி காட்டுதலே அவர்களுடைய நோக்கமாதலால், அதற்கே இன்றியமையாத இடம் அளித்தனர்.

7) ஆழ்வார் பாடல்களில் காணப்பெறும் நாயக–நாயகி பாவம் காமவுணர்வைத் தூண்டும் என்பது தவறான கருத்தாகும். இறைவனோடு ஆன்மா கொண்டுள்ள ஆன்மீகவுறவைச் சுட்டவே இவ்வுத்தி கையாளப் பெறுகிறது. நாயக–நாயகி பாவம் பக்தியில் ஒரு படிநிலையே; அது சாதாரண மாந்தன் இறைவனிடம் கொள்ள வேண்டிய பற்றைப் புரிந்து கொள்ளத் துணை செய்கிறது.

பின் நூற்றாண்டுகளில் வந்த வைணவ ஆச்சாரியார்களும் தமிழ் மொழியின் சிறப்பை வற்புறுத்தி வந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு

தொண்டரடிப பொடியாழ்வார் தமது ***திருமாலை***யில்,

***குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி***
***வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கைநோக்கிக்***
***கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்டு***
***உடல் எனக்கு உருகுமாலோ!என் செய்கேன் உலகத்தீரே!***

என்னும் பாடலில் திருவரங்கப்பெருமான் பின்புறத்தை வடக்கே காட்டியிருப்பதற்கான காரணத்தைப் பெரியவாச்சான்பிள்ளை சுட்டிக்காட்டுவார். வடக்கிலுள்ள மக்கள் தமிழ் அறியாதவர்களாகவும் ஆழ்வார் பாடல்களின் உயர்வை உணராதவர்களாகவும் இருப்பதே இதற்குக் காரணமென்பார் அவர்.

வேதாந்த தேசிகன் தமது ***திராவிட உபநிஷத தாத்பர்ய ரத்னாவளி***யில் தமிழ் மொழியின் பெருமையை நிலை நாட்டுவார். தாம் தமது ***ரத்னாவளியை*** வடமொழியில் எழுதியது ***திருவாய் மொழியை*** மூலத்தில் படித்து அதனைத்துய்க்க இயலாத தமிழரல்லாதாரின் நன்மை கருதியே என்பதும் அவர் கூற்று. நம்மாழ்வாரின் ***திருவாய்மொழியை*** அவர் கீழ்க்கண்டவாறு பாராட்டுவார்

> சடகோபனின் புனிதப்பாடல்கள் தனித்தன்மை கொண்டவை. ஏராளமான முனிவர் நூல்களும் இதிகாசங்களும், புராணங்களும் வேதங்கள் கூறும் தத்துவப் பொருளைத் தெளிவாக்க மட்டுமே முயன்றன ஆனால் சடகோபன் தனிபபெரும் பெருமைக்குரிய முனிவனாவான் அவன் எழுதிய திருவாய்மொழி பிறருடைய நூல்களைப் போலல்லாமல் இறைவனது கூற்றின் நுட்பங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. இதனால் அது ஒப்புயர்வு அற்ற நூலாகும்.(4)

வேதாந்த தேசிகர் தமது ***குருபரம்பராசாரம்*** என்னும் நூலில் நம்மாழ்வாரைத் "திருமாலின் பத்துப் புது அவதாரங்கள்" என்று குறிப்பிடவும் காணலாம் "வேதங்களைப் படித்தபோது ஏற்பட்ட ஐயங்களுக்கெல்லாம் தீர்வுகளை நம்மாழ்வாரின் பாடல்களிலிருந்தே பெற்றேன்" என்பதும் தேசிகரின் பாராட்டாகும்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தமது ***ஆச்சார்ய ஹிருதயத்தில்*** தமிழும் வடமொழியை ஒத்த தொன்மை உடையதென்றும் தமிழிலும் வடமொழி வேதங்களுக்கு இணையான வேதங்கள உண்டென்றும் கூறுவார்.

*தொடர்ச்சி அடுத்த இதழில்*

# எழுத்துச் சீரமைப்பும் ஐகார ஔகாரங்களும்

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வுமையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி –605 008
கைபேசி : 94431 51044

1. தமிழ் நெடுங்கணக்கு பன்னிரண்டு உயிர்களையும், பதினெட்டு மெய்களையும், மூன்று சார்பெழுத்துக்களையும் கொண்டதாக இருந்தாலும் வரிவடிவம் என்று வரும்போது உயிர், மெய், உயிர்மெய் என்ற மூன்று வகையான வடிவங்கள் எழுத்துமுறையில் காணப்படுகின்றன. ***அகல்*** என்ற சொல்லில் இந்த மூவகை வரிவடிவங்களின் நிகழ்ச்சியைக் காணலாம். இவற்றுள் உயிர்மெய் யெழுத்துக்கள் ஒலிக்கப்படுகையில் மெய்யும் உயிரும் முறையே முன்னும் பின்னுமாகவே நிகழ்கின்றன. எனவே இவற்றின் வரிவடிவங்களில் மெய்யொலிக் குறிகளையடுத்தே உயிரொலிக் குறிகள் நிகழவேண்டும். *கா, நா, தா* என்பவற்றில் இந்த நியதி போற்றப்படுவதைப் போல் *கெ, கே, கை, கொ, கோ, கௌ* முதலானவற்றில் போற்றப்படவில்லை. 'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' (எழுத்து.இளம்.18) என்ற தொல்காப்பிய நூற்பா உயிர்மெய் யெழுத்துக்களில் மெய் முன்னும் உயிர் பின்னும் ஒலிக்கப்படும் என்பதையே உணர்த்துகிறது. ஆனால் உயிர் மெய்க்குரிய பெரும்பான்மையான வரிவடிவங்களில் மெய் முன்னும் உயிர் பின்னும் என்ற நியதி குறியீட்டு நிலையில் சீர்குலைந்துள்ளது.

2. முதல் முறையாக அ.இ.அ.தி.மு.க ஆட்சிப்பொறுப்பில் இருந்த போது தமிழ் எழுத்துச்சீரமைப்பு தொடர்பாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் விளைவாகப் பத்து உயிர்மெய் வரிவடிவங்கள் மாற்றம் பெற்று அவை *ணா, றா, னா, ணை, லை, ளை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ* என்று சீரமைக்கப்பட்டன. கிடைத்தவரை ஆதாயம் என்றுதான் இந்த எழுத்துச் சீரமைப்பைக் கருதவேண்டும். அரசின் இந்த நடவடிக்கை உயிர்மெய் வரிவடிவங்களின் அமைப்பில் செய்ய வேண்டிய அடிப்படை மாற்றங்களைக் கருத்தில் கொள்ளவில்லை. மொழியியல் வல்லுநர்களையும் முற்போக்குச் சிந்தனையாளர்களையும் கொண்ட ஓர் உயர்மட்டக்குழுவின் துணைகொண்டு அரசு எழுத்தைச் சீரமைக்கும் முயற்சியை மேற்கொண்டிருந்தால் தமிழ் நெடுங்கணக்கில் காணப்படும் நெருடல்கள் தவிர்க்கப் பட்டிருக்கலாம். மெய்க்குறி முன்னும் உயிர்க்குறி பின்னுமாக அமைந்த உயிர்மெய் வரிவடிவங்களைக் காண்பதே எழுத்துச் சீரமைப்பின் இலக்காக இருக்க வேண்டும். இந்த முயற்சியில் சிக்கல்களும் எதிர்ப்புகளும் உள்ளதை நாம் நன்கு அறிவோம். ஏனெனில் இந்திய மொழிகள் பலவற்றிலும் இந்த நிலையே காணப்படுகிறது. எனவே எழுத்துச் சீரமைப்பு முயற்சியை நாம் இங்கே வலியுறுத்த விரும்பவில்லை. தமிழைப் பொறுத்தவரையில் சில வரிவடிவங்கள் நெடுங்கணக்கில் இடம்பெற

வேண்டுமா என்பதை மட்டும் நாம் இந்த எழுத்துரையில் சிந்திக்க முற்படுகிறோம். சந்தியக்கரங்களாகக் கருதப்படும் ஐகார ஔகாரங்களின் நிகழ்ச்சியானது தமிழ்நெடுங்கணக்கினின்றும் உடனடியாகத் தவிர்க்கத்தக்க ஒரு சுமை என்பது இந்த எழுத்துரையின் மையக் கருத்தாகும்.

3. தமிழ்நெடுங்கணக்கில் காணப்படும் பன்னிரண்டு உயிர்களில் ஐகாரமும் ஔகாரமும் தொல்காப்பியரால் உயிர்நெடில்களாகக் கருதப்படுகின்றன (எழுத்து.இளம்.4). இவற்றை இரண்டு மாத்திரை அளவுள்ள உயிர்நெடில்களாகக் கொண்டது அவை முறையே அகரமும் இகரமும், அகரமும் உகரமும் மயங்கிய சந்தியக்கரங்கள் (எழுத்து.இளம்.54,55) என்று கருதியதன் விளைவாகும். மெய்கள் மயங்குவதுபோல் தமிழில் உயிர்கள் மயங்குவதில்லை. அசையமைப்பு (Syllabic Structure) என்று வரும்போது மொழியியல் அடிப்படையில் ஐகாரங்களை இரண்டு அசைகொண்ட அமைப்பினவாகக் கருதுவதில்லை. ஏனெனில் மொழியில் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு அசையின் சிகரமாகும். இரு குறில் பிணைந்த வரிவடிங்கள் ஓரசையாவதில்லை.

4. தமிழில் நெடிலும் குறிலும் இணைந்து மயங்கினாலும் அவை இருவேறு அசைகளுக்கு உரியவையாகவே கருதப்படும். எடுத்துக் காட்டாக, குருவி, தழுவியது ஆகிய சொற்களின் திரிபாகிய *குரீஇ* (குறுந்தொகை.46.2), *தழீஇயது* (குறள்.425) ஆகியவற்றில் நிகழும் நெடிலும் குறிலும் இருவேறு அசைகளுக்குரியதாகும். *ஆ, ஈ, ஊ, ஏ, ஓ* ஆகிய உயிர் நெடில்களுக்கு இணையான உயிர்க் குறில்கள் இருப்பது போல் ஐகார ஔகாரங்களுக்கு இல்லை. இந்தச் சந்தியக்கரங்களில் அகரத்தையடுத்து நிகழ்வதாகக் கருதப்படும் இகர உகரங்கள் அசைத்தன்மை குன்றிய உயிர்கள் (Non Syllabic Vowels) ஆகும். அதாவது அவை அரை மாத்திரை அளவுள்ள குற்றியலிகரம், குற்றிலுகரமாகவே கருதப்படும். அதனால் தான்அகரத்தையடுத்து நிகழ்வதாகத் தொல்காப்பியர் கருதும் இகரம் யகரத்தோடும் (எ–டு. ஐந்து/அய்ந்து) உகரம் வகரத்தோடும் (எ–டு.கௌவை ( குறள்.1147)/கவ்வை (குறள்.1144)) பொருந்து கின்றன. யகரமும் வகரமும் அரை மாத்திரை அளவினதாகிய மெய்களாதலின் அவற்றுக்கு இணையாக அகரத்தையடுத்து நிகழும் இகரமும் உகரமும் அதே அளவினவாகின்றன. எனவே ஐகாரத்தை அஇ என்று எழுதினாலும் ஔகாரத்தை *அஉ* என்று எழுதினாலும் அவை *அய், அவ்* ஆகியவற்றுக்கு நிகராக அமைந்து ஒன்றரை மாத்திரை அளவினவாகின்றன. இதுபற்றியே ஒலியனியல் (Phonemics) ஆய்வில் இத்தகைய உயிர்களை யகர வகரங்களின் ஒலியன்களாகக் கொள்கின்றனர் மொழியியலார். ஐகார ஔகாரங்கள் முறையே *அய், அவ்* ஆகியவற்றுடன் முரண் வழக்கில் (Contrastive Distribution) அமையும் நிலை தமிழில் காணப்படவில்லை. *அஐயம்/அய்யம், ஐவர்/அய்வர், வலை/வலய், பௌவம்/பவ்வம்* ஆகிய இணைச் சொற்கள் முரண் வழக்கில் அதாவது இருவேறு பொருண்மையை உணர்த்துவனவாக அமையாமையால் ஐகாரத்தை *அய்* என்றும் ஔகாரத்தை *அவ்* என்றும் கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது.

5. தொல்காப்பியர் ஐகார ஔகாரங்களை நெடிலாகக் கொள்வதால் இவற்றில் அகரத்தையடுத்து நிகழும் இகர உகரங்களை ஒலிப்பு நிலையில் (Phonetic Level) யகர வகரங்களாகக் குறிக்கும் ஒலியன்களாகக் கருத வாய்ப்பில்லாமல் போகின்றது. ஆயினும் ஐகாரத்தைப் பொறுத்தவரையில் அது *அய்* , எனவும் குறிக்கற்பாலது என்று தொல்காப்பியரே குறிப்பிடுகிறார் (எழுத்து.இளம்.56). இந்தக் குறிப்பு ஐகாரத்தை உயிர்நெடிலாகக் கொள்ள வழியில்லாமல் செய்துவிடுகின்றது. மேலும் தொல்காப்பியரின் இத்தகைய இருநிலை ஆய்வானது *உய், எய், ஒய்* ஆகியவற்றையும் இகரம் மயங்கிய சந்தியக்கரங்களாக அதாவது *உஇ, எஇ, ஒஇ* என ஏன் கொள்ளக்கூடாது என்ற வினாவிற்கு வழிகோலுகின்றது. ஐகாரத்தை உயிர்நெடிலாகக் கொள்ளும் ஆய்வினைத் தவிர்த்து விட்டால் இத்தகைய வினா எழ வாய்ப்பில்லை.

6. ஐகாரம் *அய்* என்றும் குறிக்கத்தக்கது என்றது போல் ஔகாரமும் *அவ்* எனக் குறிக்கத்தக்கது என்று தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் *பௌவம்* (பத்துப்பாட்டு.6.113), *கௌவை* (அகம்.312.5) ஆகியவை *பவ்வம்* (பத்துப்பாட்டு.2.135), *கவ்வை* (அகம்.256.13) எனவும் வழங்கும் நிலை தமிழில் காணப்படுகின்றது. ஔகாரம் உண்மையில் *அவ்* என்றே குறிக்கத்தக்கது என்பது *வௌவால்* என்பது *வாவல்* (நற்றிணை.87.1) எனவும் வழங்குவதைக் கொண்டே உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இந்தச் சான்றினைக் குறிப்பிட்டவர் காலஞ்சென்ற கொண்டல் *சு.மகாதேவன்* என்ற தமிழ்ப் பேராசிரியர் ஆவார். *ஐ* என்னும் முன்னிலை ஒருமை விகுதி (எ–டு. நீ செய்தனை) *ஆய்* என்பதன் குறில் வடிவம் ஆகலின் சந்தியக்கரமாகிய ஐகாரத்தை அய் என்றே குறிப்பிட வேண்டும் என்று வலியுறுத்துவார் பேரா.வேங்கடராஜுலு ரெட்டியார் (1937, The Journal of Oriental Research of the University of Madras. *ஐகார ஔகாரம்.* பக்.10).

7. ஐகார ஔகாரங்களைத் தமிழ்நெடுங்கணக்கில் இருத்திக் கொள்வது தமிழ் ஒலியனியலுக்குப் பொருந்தியதன்று என்பதற்கான சில சான்றுகள் மேலே காட்டப்பட்டன. இந்த வகையில் மேலும் ஒரு சான்றினை இங்கே கருத்தில் கொள்ளலாம். ஐகாரத்தை உயிர்நெடிலாகக் கொள்வது சில சொற்களின் கட்டுக்கோப்பினை ஆராயத் துணைபுரியவில்லை. *குழம்பு* என்ற சொல்லைக் கொண்டு இதனை விளக்கலாம். இந்தச் சொல் *குழய்* (=குழை) என்ற பகுதியின் அடியாகத் தோன்றியதாகும். முதல் நிலையில் *குழம்பு* என்பது *குழம்+பு* என்ற அமைப்பினதாகக் கொள்ளப்படும் அடுத்த நிலையில் *குழம்* என்பதன் அமைப்பு ஆய்வுக்குரியதாகின்றது. ஐகாரம் உயிர்நெடில் என்ற தொல்காப்பியரின் கருதுகோளைக் கருத்தில் கொண்டால் *குழம்* என்பது *குழை+ம்* என்ற அமைப்பினதாகும். இந்த அமைப்பில் பகுதிச் சொல்லாகிய *குழை* என்பதில் நிகழும் ஐகாரத்தை அகரமும் இகரமும் மயங்கிய உயிர்நெடிலாகத் தொல்காப்பியர் கொள்வதால், இகரம் மகரமெய்யின் முன் கெட்டு குழை+ம் என்பது குழ+ம் என்று அமைந்ததாகக் கருத வேண்டும். இகரம் மகரத்தின் முன் கெடுதல் தமிழின் இயல்பான புணர்ச்சிக்கு மாறுபட்டதாகும். மாறாக, *குழை+ம்* என்பதை *குழய்+ம்* என்று கொள்கையில் யகரமெய் மகரமெய்யின் முன்

கெடுதல் இயல்பான நிகழ்ச்சியாக அமைகின்றது இந்த ஆய்வின்மூலம் ஐகாரத்தை உயிர்நெடிலாகக் கொள்ள வாய்ப்பில்லை என்பது மட்டுமின்றி, அதனை ஓர் ஒலியனாகவும் கருதுவதற்கில்லை என்பதும் தெளிவாகின்றது. ஐகாரத்தை உயிர் நெடிலாகவோ, ஒலியனாகவோ கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது. எனவே தமிழ்நெடுங்கணக்கில் ஐகார ஔகாரங்கள் தவிர்க்கப்பட வேண்டிய சுமைகளாகின்றன. தமிழ் எழுத்தியலில் இவற்றின் நிகழ்ச்சி பிறமொழி நெடுங்கணக்கின் தாக்கத்தால் நேர்ந்திருக்க வேண்டும். ரிக் வேத பிராதிசாக்கியத்தில சாகடாயனர் ஐகார ஔகாரங்களை முறையே அகரமும் இகரமும், அகரமும் உகரமும் மயங்கிய உயிர்நெடில்களாகக் கொள்வது இங்கே கருதத்தக்கதாகும்

8 ஐகார ஔகாரங்களைப் பற்றி மேலே நாம் சிந்தித்த கருத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கைச் சீரமைக்க எப்படி உதவும் என்பதை இனிக் காண்போம். இந்த இரண்டு எழுத்து வடிவங்களை முறையே *அய், அவ்* என்று எழுதுவதால் தமிழ் ஒலியனியல் எவ்விதப் பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு ஐகார ஔகாரங்களை மட்டுமல்ல கை/னை முதல் கௌ/னௌ ஈறாகவுள்ள முப்பத்தாறு உயிர்மெய்களையும் தமிழ்நெடுங்கணக்கிலிருந்து தவிர்த்து விடலாம். ஐகார ஔகாரங்களை முறையே *அய், அவ்* எனக் குறிபபதன் மூலம் *கை...னை* **(18)**, *கௌ... னௌ* **(18)** ஆகிய முப்பத்தாறும் இனி *கய்...னய், கவ். .னவ்,* என்று குறிக்கப்படும். இதனால் ஏற்படும் பலன்கள் பலவாகும். தொல்காப்பியர் ஐகார ஔகாரங்களை மொழி முதலிலும் மொழி இறுதியிலும் நிகழ்வனவாகக் குறிப்பிடுவார் இனி இது தவிர்க்கப்படும். ஔகார ஈற்றுச் சொற்களாகக் *கௌ, வௌ* ஆகிய இரண்டை மட்டுமே குறிப்பதுடன் வகரவீற்றுச் சொற்களாக *அவ்* (=அவை), *இவ்* (=இவை), *உவ்* (=உவை), *தெவ் 'பகை'* ஆகிய நான்கை மட்டுமே தொல்காப்பியர் குறிப்பிடுவார். *கவ்* (=கௌ), *வவ்* (=வௌ) ஆகிய இரண்டையும் சேர்த்து வகரவீற்றுச் சொற்கள் இனி ஆறாகக கொளளப்படும்.

9 குழந்தைகளுக்கு உயிரெழுத்துக்களை அறிமுகப்படுத்துகையில் இனி, *ஐ, ஔ* ஆகியவை நீங்கலாக எஞ்சியுள்ள பத்து உயிர்களைக் கற்பித்தால் போதும் இதே போல் *கை* முதல் *னை* வரை நிகழும் முதல் வரிவடிவத்தைக் கற்பிக்க வேண்டியதில்லை இதே போல் *கௌ* முதல் *னௌ* வரை உள்ள எழுத்துக்களையும் கற்பிக்க வேண்டியதில்லை. இதன்மூலம் கிடைக்கும் எளிமையின் பலனை அச்சகங்களும் தட்டச்சு, தொலையச்சு (Tele-Printer), தொலைத்தட்டச்சு (Telex), கணினி ஆகியவற்றைப் பயன்படுத்துவோரும் பெறலாம் தமிழ் எழுத்துச் சீரமைப்பைப் பொறுத்த வரையில் ஐகார ஔகாரங்களையும் அவை நிகழும் உயிர்மெய்யெழுத்துக்களையும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து தவிர்ப்பது மிக எளிமையான சிக்கலற்ற சீரமைப்பாகும் தமிழக அரசு இத்தகைய சீரமைப்பை நடைமுறைக்குக் கொண்டுவருவது பற்றி முனைப்பாகச் சிந்தித்து விரைந்து செயல்படவேண்டும்

# விட்டுக் கொடுத்தல்

பேராசிரியர் **மு.மணிவேல்,**
தமிழியற் புலத்தலைவர் (ப.நி.),
மதுரை காமராசா பல்கலைக்கழகம்,
மதுரை–625 021
கைபேசி . 98655 34622

உலகம் தனிமனிதனால் ஆனதில்லை; கோடிக்கணக்கான மக்களின் இருப்புடையது இவ்வுலகம் தனிமனிதன் *வீட்டார், ஊரார், நாட்டார், தேசத்தார், உலகத்தார்* என்று விரிந்தும் பரந்தும் அமைந்த மானிட சமூகத்தையும், மற்றைய உயிர்களின் கூட்டத்தையும் உள்ளடக்கியது இவ்வுலகம் இவ்வுலகத்தில மனிதர்கள் முதலான அனைத்து உயிர்களும் ஒருவரை ஒருவர், ஒன்றை ஒன்று சார்ந்தும், சேர்ந்தும் வாழும் வாய்ப்பே மிகுதி.

வாய்ப்பும் வசதியும் எல்லாருக்கும் எல்லாப் பொழுதும் கிடைப்பதில்லை இவற்றைப் பெற்றவர்கள் முழுவதுமாகப் பயன்கொள்வதும் இயலாது; எனவே வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் பிறருக்குக் கொடுத்தும் அவர்களின் அன்பைப் பெற்றும் வாழ்வதுதான் போற்றத்தக்க புகழ் சேர்க்கும்.

எல்லாரினும் தாமே பெரியர்; எல்லாம் தமக்கே என எண்ணியிருப்பவர்களின் எண்ணம் நிலைப்பதுமில்லை, நிரந்தரமாவதும் இல்லை எனவே பொதுமை நோக்கு அனைவருக்கும் வேண்டும் பிறரையும் தம்போல் பேணிப் பாதுகாத்தலும் விட்டுக்கொடுத்தலும் வேண்டும் பிறரிடம் சிலவற்றை எதிர்பார்க்கிறவர்கள் பிறர் எதிர்பார்ப்பதைச் செய்வதற்கும் உரியவர்கள் ஆதல் வேண்டும்

பிறருக்கு உதவுதல் மூலம் அவர்தம் அன்பைப் பெறலாம்; நட்பைக் காட்டலாம்; அதனால் சிக்கல்களைத் தவிர்க்கலாம்

கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்க்கை சிறக்கும். நீதிமன்றங்களில் வழக்குச் சொலலபபடும் பலவற்றிற்கு அடிப்படை, விட்டுக் கொடுக்காமைதான் காரணமாகின்றது. உடன்பிறந்தார், உற்றார், சுற்றத்தார், நண்பர்கள், நட்டார்கள் என்று எல்லாரும் விட்டுக் கொடுத்து வாழும் பண்பினைப் பெறவேண்டும் '*கூடி வாழ்ந்தால் கோடி நன்மை*' என்பது அனுபவத்தால் சொன்ன வாசகம்

விட்டுக் கொடுக்கும் மனம் இல்லாத நிலையில்தான் வீட்டில், சமூகத்தில், நாட்டில் சிக்கல்கள் அமைகின்றன உலகில் பலகாலத்து நடந்த, நடக்கின்ற போர்களுக்கும், பகைக்கும், இழப்புகளுக்கும் விட்டுக் கொடுத்தல் இல்லாமையே காரணமாகின்றது.

ஓர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவன் கால் இடறிக் கீழே விழுந்து விடுகிறான் முதலில் ஓடி விடுபவன் அவனைத் தூக்கி விடுகிறான்; பின்னர் இருவரும் ஓடுகிறார்கள். கிழே விழுந்தவன் வெற்றி பெறுகிறான். பரிசு வழங்கும் போது அதனைத் தன்னைத்

தூக்கிவிட்டவனுக்கு வழங்கக் கூறுகிறான். தூக்கிவிட்டவனோ வெற்றி பெற்றவனுக்குக் கொடுக்கச் சொல்கிறான் இங்கு, விட்டுக் கொடுத்ததில் அவர்கள் வெற்றி, தோல்வியை மறந்து போகிறார்கள் இந்த நிலையில் இருவரும் வெற்றி பெற்றவர்கள் ஆகிறார்கள். ஆகவே விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை

தமக்கென வாழ்தல் கூடாது என்பதில்லை. பிறருக்காகவும் வாழ்தலே சிறப்பாகும். இந்த உலகம் நிலை பெற்றுக் கொண்டிருக்கிற தென்றால் அதற்குக் காரணம் இந்த உலகத்தவர்கள் தமக்கென என்று அல்லாமல் பிறர்க்கென வாழ்கின்றவர்களாக, இருப்பதால்தான் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற பாண்டியமன்னன் பாடியிருக்கிறார் (தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையான்—உண்டாலம்ம இவ்வுலகம்).

துரியோதனன் கர்ணனின் நட்பைப் பெற்றான்; அவனுக்கு நாட்டைக் கொடுத்தான்; ஆளச் செய்தான். அதனால் கர்ணன் தன் சகோதரர்களாகிய பாண்டவர்களை எதிர்த்த நண்பன் துரியோதனனுக்காகப் போர்க்களம் சென்று போரிட்டு, உயிர்விட்டுப் புகழ் பெற்றான் இராமாயண இராமன் தமக்கு ஆளுமை உரிமை உடைய நாட்டைத் தம் தம்பி பரதனுக்குக் கொடுத்துச் சிறந்தது உலகம் போற்றும் உயர் செயலாகும்

விட்டுக் கொடுப்பவனுக்குப் பெரும் மனமும், பேரன்பும் உயிர் இரக்கமும் வேண்டும். எல்லா உயிர்களிடத்திலேயும் அன்பு காட்டுதல் வேண்டும். தன்னலம் குறையப் பிறர் நலம் பேணும் போது அன்பு பெருகுகிறது.

'*உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை நீங்கள் தன்னலத்தைத் துறந்தவர்களா? அப்படியானால் உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை*' என்கிறார் விவேகானந்தர்.

'*எல்லாரிடத்தும் அன்பு காட்டுங்கள்*' என்கிறார் ஏசு. 'சேமிப்பில் ஒரு பகுதியைப் பிறருக்குக் கொடுத்து வாழுங்கள் என்கிறார் முகம்மது நபி.

'*நீங்கள் விரும்பும் உரிமைகளை எல்லாம் பிறருக்கு அளித்து விடுங்கள்*' என்கிறார் இங்கர்சால்.

'*உலகத்தவர்க்கு நீ தொண்டனாகில், உலகத்தவர் உனக்குத் தொண்டர் ஆவார்கள்*' என்கிறார் ரூஸ்வெல்ட்.

'*நல்ல செயல்களுக்கு வட்டி கிடைக்கும்*' என்கிறார் மில்டன். நல்ல செயல்களில் ஒன்று விட்டுக் கொடுத்தல். விட்டுக் கொடுப்பவர் தோல்வி அடைவதில்லை.

'*நீ உண்ணக் கனிமரங்கள் நட்டனர்; பிறர் உண்ண நீயும் நடு*' என்பது பாரசீகப் பழமொழி

விட்டுக் கொடுத்தல் தியாகம். தியாகங்கள் மூலமாகவே சாதனைகளைச் சந்திக்க இயலும்.

விட்டுக் கொடுப்போம்; நட்பைப் பெருக்குவோம். பிறர் போற்ற வாழ்வோம்.

# தமிழில் ஒப்பியல் இலக்கிய, இலக்கண ஆய்வுகள்

பேராசிரியர் **உ.கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–625 021.
கைபேசி : 94435 71776

## சென்ற இதழின் தொடர்ச்சி :

1971இல் தில்லிப் பல்கலைக்கழகத்தில் சே.இரவீந்திரகுமார் *'திருவள்ளுவரும் கபீரும்–ஓர் ஒப்பியலாய்வு'* என்ற் தலைப்பிலும், கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் கே.ராகவன் 1974இல் 'Krishnalila as described in Sursagar and Tamil Prabandam' என்ற தலைப்பிலும், 1977இல் சி.கனகசபாபதி, *'பாரதி, பாரதிதாசன் ஒப்பிலக்கிய ஆய்வு'* என்ற தலைப்பிலும், கேரளப் பல்கலைக்கழகத்தில் காஞ்சனா 'A comparative Study of Kumaran Asan and Bharathidasan' என்ற தலைப்பிலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் எம்.பொன்னம்மாள் சண்முகம் *'தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலும் பரதரின் நாட்டிய சாஸ்திரமும் ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், வீ.முத்துச்சாமி *'திருக்குறளும் பகவத்கீதையும்–ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், சி.ரவீந்திரன் 'A Comparative Study of Commentators with Special reference to Adiyarkkunallar (1977)' என்ற தலைப்பிலும், ஏ.விசுவதாசு *'கம்பராமாயணமும் இரட்சண்ய யாத்திரிகமும் இலக்கியப் பார்வையின் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், 1979இல் ஜபல்பூர் பல்கலைக்கழகத்தில் ஆர்.வெங்கடகிருஷ்ணன், 'Vatsalya Rasa in Hindi and Tamil Bhakti poetry' என்ற பொருண்மையிலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் அஞ்சலா ரிச்சர்ட்ஸ் 'A Comparative Study of the hymns of Tanjai Vedanayaga Sastriar and Charles Wesley of England' என்னும் தலைப்பிலும், சொ.அரியநாயகம் *'இராமலிங்கரும் இராமகிருஷ்ணரும்'* என்ற தலைப்பிலும், அ. அருணாசலம், 'The Images of Bharathidasan and Shelly' என்ற பொருளிலும், 1979இல் கு.மோகனராசு *'தொல்காப்பியமும்–திருக்குறளும் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், மோசசு மைக்கேல் பாரடே *'சித்தர் பாடல்களும் விவிலியச் சிந்தனைகளும்–ஓர்*

*ஒப்பாய்வு'* என்னும் தலைப்பிலும், சி.ராதாகிருஷ்ணசர்மா 'The Ramayana in Telugu and Tamil-A Comparative Study with Special reference to Ranganatha Ramayana in Telugu and Kambaramayanam' என்ற தலைப்பிலும், கே.ராஜசேகரன் *'விடுதலைக்கு முற்பட்ட தமிழ், மலையாளச் சிறுகதைகள்–ஓர் ஆய்வு'* என்ற தலைப்பிலும், டி.வெங்கடகிருட்டிணன் 'ஜான் ஆஸ்டின், லட்சுமி–ஒப்பாய்வு என்ற தலைப்பிலும், 1979இல் ஜான்சாமுவேல் 'Aspects of Romanticism with Special reference to Shelly and Bharathi' என்ற பொருளிலும், யு.வி.ஜெயசேகரன் 'Milton and Kamban as epic Poets' என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்காக ஒப்பியல் ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

1980இல் ம.செ.இரபிசிங் *'தமிழ் மலையாளச் சமூக நாவல்கள்–ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1980இல் கிருஷ்ணா சஞ்சீவி *'பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இணைநிலை ஆய்வு'* என்ற தலைப்பிலும், 1980இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நா.சரஸ்வதி *'கம்பராமாயணம், கந்தபுராணம் அவலவீரர்கள்'* என்ற தலைப்பிலும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் என்.தர்மாரெட்டி, *'திருவள்ளுவர், வாமனர்–ஒப்பாய்வு (1981)'* என்ற தலைப்பிலும், ம.திருமலை *'ஜெயகாந்தன், தகழி சிவசங்கரபிள்ளை நாவல்கள்–ஓர் ஒப்பாய்வு (1981)'* என்ற தலைப்பிலும், எம்.தெய்வநாயகம் *'பைபிள், திருக்குறள், பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்கள்–ஒப்பாய்வு'* என்னும் பொருளிலும், மீரட் பல்கலைக்கழகத்தில் கே.ஆர்.நஞ்சுண்டன் 'Thirumular and Gorkhnath - A Comparative Study' என்ற தலைப்பிலும், கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பா.நடராசன் *'மகாகவி பாரதியும் வங்கப் புரட்சிக்கவி நஜ்ருல் இஸ்லாமும்'* என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்காக ஆய்வுகளைச் செய்துள்ளனர். 1981இல் பர்வதரெஜினா பாப்பா, *'டி.எச்.லாரன்சு, ஜெயகாந்தன் நாவல்கள் – ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், டி.பரமேஸ்வரி *'காப்பியங்களில் எதிர்நிலைப் பாத்திரங்கள்–கம்பராமாயணம், வில்லிபாரதம்'* என்ற தலைப்பிலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1981இல் அ.அ.மணவாளன் *'ஜான்மில்டனும் கம்பராமாயணமும் –ஒப்பிலக்கிய ஆய்வு (1981)'* என்ற தலைப்பிலும், வீ.முருகன் *'டி.எச்.லாரன்சும் சங்க அகப்பாடல்களும் ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், 1982இல் எம்.எஸ்.கோபால்சுவாமி *'எட்மண்ட் பர்க்கும் அண்ணாவும்–ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், 1982இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். சேஷன் 'A Comparative

Study of the Historical Novels of Kalki and Vridavanal Varma' என்ற தலைப்பிலும், **1982**இல் இரா.வேலு, *'திருக்குறள், கௌடலீயம்–ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்காக ஆய்வுகளை ஒப்பாய்வு அணுகுமுறையில் செய்துள்ளனர். **1983**இல் சாமுவேல்தாசன் *'பாரதியார், வள்ளத்தோள்–ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் சின்னப்பன், *'பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ், இந்தி நாடகங்கள்–ஒப்பீட்டு ஆய்வு'* என்ற தலைப்பிலும், சபல்பூர் பல்கலைக்கழகத்தில் என்.சுந்தரம் `A Comparative Study of Meera and Andal' என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்காக ஆய்வுகளைச் செய்துள்ளனர். **1983**இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சீனி. சௌமிய நாராயணன் *'வியாச வில்லிபாரதங்கள்–ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆர்.தங்கவேலு, `The Influence of English on Modern Tamil Prose' என்ற தலைப்பிலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பி.இராசேந்திரன் `The plays of Bernard Shaw and Cho-A Comparative Study' என்ற தலைப்பிலும், எஸ்.இராமகிருஷ்ணன் `The Epic Muse in the Ramayana and Paradise Lost' என்னும் பொருண்மையிலும், **1984**இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இரா.பிரேமா *'இராமாயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு–கம்பன், வான்மீகி, துளசிதாசன்'* என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்காக ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

**1985**இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மு.இளமாறன் *'இராபர்ட் பர்னஸ், பாரதிதாசன்–ஒப்பியலாய்வு'* என்ற தலைப்பிலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் துரை.செகநாதன் *'வில்லியம் பட்லர்பேட்ஸ் மற்றும் சுப்பிரமணிய பாரதியின் பாடல்களில் புலப்படும் புனைவியல் கூறுகள் – ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், **1986**இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மா.செண்பகம் *'கிரேக்க சங்க இலக்கியத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் –ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், **1987**ல் கேரளப் பல்கலைக்கழகத்தில் பி.பத்மநாபன் தம்பி *'கம்பராமாயணம் எழுத்தச்சனின் அத்யாத்ம இராமாயணம்–ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் எஸ்.பத்மா *'நாவுக்கரசர், நம்மாழ்வார் பாடல்கள்–ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், பத்மா சீனிவாசன் `Herbert's and Alwar's Mystic Poetry' என்ற பொருளிலும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிற்பி பாலசுப்பிரமணியன் *'பாரதியார், வள்ளத்தோள் –ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பானுமதிராஜன் *'வங்கமொழி நாவல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகள் –ஓர் மதிப்பீடு'* என்ற பொருளிலும் முனைவர் பட்டத்திற்காக ஒப்பாய்வுகளைச் செய்துள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பா.ஆனந்தகுமார் *'பாரதியார் மற்றும் குமரன் ஆசான் குருஜாடா அப்பாராவ் கவிதைகளில் புனைவியல் ஓர் ஒப்பாய்வு'* என்னும் தலைப்பிலும், சு.ஆறுமுகம் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் *'சு.சமுத்திரத்தின் நாவல்களும் எச்.ஜி.வெல்சின் நாவல்களும்–ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சு.ஆவுடையப்பன் *'தமிழ்ப் புதுக்கவிதைகளில் மேற்கத்தியத் தாக்கம்'* என்ற தலைப்பிலும், அருள்ரத்தினம் *'எமிலிஜோலா, ஜெயகாந்தன் நாவல்களில் சமுதாயப் பிரச்சினைகள்–ஓர் ஒப்பீட்டாய்வு'* என்ற தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்காக ஒப்பியல் ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

## இலக்கண ஒப்பாய்வுகள் :

இந்திய மொழிகளில் *'இலக்கண ஒப்பாய்வுகள்'* மிகமிகக் குறைவு என்றே சொல்லலாம். *'இலக்கண ஒப்பாய்வுகள்'* என்னும் ஆட்சி இரண்டு பொருள் நிலைகளில் ஆளப்படுகின்றது. ஒன்று மொழியின் அமைப்பை ஆராய்வது; மற்றொன்று ஒரு மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூல்களை ஆராய்வது. மொழி ஆய்வும் இலக்கண ஆய்வும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாகும்.

## மொழி ஆய்வு–இலக்கண ஆய்வு :

ஒரு மொழியின் அமைப்பை ஆராய்வது இன்று *'மொழியியல்'* என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது. 20ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் *'இலக்கண ஆய்வு'* என்பது மொழியமைப்பு ஆய்வாகவே கொள்ளப்பட்டது. *'மொழி ஆய்வு'* என்பது மொழியமைப்பு ஆய்வாகவே கொள்ளப்பட்டு, தனிமொழிக்கு இலக்கணம் எழுதுவதே முதன்மைப் பணியாகக் கருதப்பட்டது. மொழியின் பொதுப் பண்புகள், மொழியமைப்பின் பொதுக்கூறுகள், மொழிமாற்றம், ஒரு மொழிக்கும் அதன் பிற துறைகளுக்கும் உள் தொடர்புகள் ஆகியவற்றைத் தீவிரமாக ஆராய்ந்து *'மொழியியல்'* என்னும் தனித்துறையாக அன்று அது கொள்ளப்படவில்லை.

## இலக்கணவியல் ஆய்வு :

ஒரு மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூல்களை ஆராய்வது இன்று *'இலக்கணவியல்'* என்னும் சிறப்புப் பெயரால் குறிப்பிடப் படுகின்றது. (செ.வை. சண்முகம், இலக்கண உருவாக்கம், (பல்லவர்,

பாண்டியர் காலம்) சென்னை, 1994, ப.21). உலகளாவிய நிலையில் மொழியமைப்பையும் அதன் பண்புகளையும் ஆராய்கின்ற மொழி ஆய்வு 'Linguistics', 'மொழியியல்' என வழங்கப்படுவதாலும், பல உலக மொழிகளுக்கு முன்னரே வரையறுத்த இலக்கண நூல்கள் இருப்பதாலும் *'இலக்கண ஆய்வு'* என்பதைக் குறுகிய புதுப்பொருளில் பயன்படுத்தலாம் எனக் கருதியே இப்பெயர் தரப்பெற்றுள்ளது.

**வளர்ச்சி நிலைகள் :**

இன்று இலக்கண ஆய்வுகள் பல நோக்குகளில் விரிவாகவும் பரவலாகவும் செய்யப்படுகின்றன. பலவகையான இலக்கண நூல்கள் முன்னரே மொழியில் இருப்பதால், காலங்காலமாக அவை ஆராயப்பட்டு வருவதால் தமிழில் பலவகையான நோக்கீட்டு நூல்கள் (பார்வை நூல்கள் –Reference Books) வெளிவந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதுவே இலக்கண ஆய்வின் பன்முகத் தன்மையைக் காட்டும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பா.சங்கரேஸ்வரி 2005ஆம் ஆண்டில் *'இடைக்கால தமிழிலக்கணங்களில் சமஸ்கிருத இலக்கணங்களின் தாக்கம்'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 2015ஆம் ஆண்டில் மனோன்மணிதேவி *'தமிழ் இலக்கண மரபும் சொற்புணர்ச்சி விதிகளும்'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார். 2016ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக *கோ.கருணாகரன் 'தமிழ் இலக்கண உருவாக்கத்திற்கான சமூகப்பின்புலம்'* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார். இதே ஆண்டில் இதே பல்கலைக்கழகத்தில் *பா.இரேவதி 'தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் புறநானூற்றின் திணை, துறை, அமைப்பு'* என்னும் பொருளில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார்.

**இலக்கண ஆய்வுகள் தொடர்பான பார்வை நூல்கள் :**

நோக்கீட்டு நூல்கள் அல்லது பார்வை நூல்களில் அடிப்படையானவை இலக்கண வரலாற்று நூல்களாகும். இந்நூல்களே தமிழில் தோன்றிய அனைத்து இலக்கண நூல்களையும் தொகுத்து அவைகளின் வரலாறு, பொருள், உள்ளடக்கங்களைத் தெளிவு

படுத்துகின்றன. தமிழில் இலக்கண வரலாற்றை எழுதிய பெருமை இத்தாலி நாட்டின் பெஸ்கி என்னும் வீரமாமுனிவரையே (1684–1742) சேரும். அவர் இலத்தீன் மொழியில் எழுதிய ***'செந்தமிழ் இலக்கணம்'*** (1730) என்ற நூலில் தமிழில் காணலாகும் இலக்கண நூல்களின் வரலாற்றை மிகச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளார் (செ.வை.சண்முகம், கிறித்தவ அறிஞர்களின் இலக்கணப்பணி, சென்னை, 1993, பக்.105–110). *'இலக்கண வரலாறு'* என்ற தலைப்பில் இதுநாள் வரையில் இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன.

1. சோம.இளவரசு, இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,1963. 2. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985. இவ்விரண்டு நூல்களும் தமிழ் மொழியின் புறவரலாற்றையே விளக்குகின்றன. ஆராய்ச்சியால் பெற்ற தெளிவுகளை நுட்பமாக விளக்கவில்லை. இவ்விரு நூல்களிலும் தமிழ் மொழியின் சொற்களஞ்சியத்தை ஆராயும் 'நிகண்டு நூல்களின் வரலாறு' இணைக்கப்படவில்லை. எனவே அவை தனி நூல்களாக வெளிவந்துள்ளன.

1. சுந்தர சண்முகனார், தமிழ் அகராதிக்கலை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1965. 2. வ.ஜெயதேவன், தமிழ் அகராதியின் வளர்ச்சி வரலாறு, சென்னை, 1985. இவ்விரு நூல்களும் தமிழின் இலக்கணம் என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பாட்டியல், நிகண்டு என்னும் ஏழு பகுதிகளை உள்ளடக்கியது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. மேனாட்டார் ஐரோப்பிய மொழிகளில் எழுதிய பல இலக்கண நூல்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டுகளிலிருந்து கிடைக்கின்றன. இந்நூல்கள் தமிழின் மரபிலக்கண நூல்கள் கூறாத பல மொழியமைப்பு உண்மைகளைத் தெளிவுபடுத்துகின்றன. ஆதலால் இவற்றையும் தமிழ் இலக்கண வரலாறு எழுதுவோர் இணைத்துப் பார்க்க வேண்டும்.

தமிழின் ஒவ்வொரு இலக்கணப் பகுதியைக் குறித்தும் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் இருப்பதால் ஒவ்வொரு இலக்கணக் கூறுகள் குறித்த கருத்துக்களையும் தொகுத்து *'இலக்கணத் தொகை'* என்னும் பொதுத் தலைப்பில் எழுத்து, சொல் பற்றிய தனி நூல்களைச் ச.வே.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ளார்.

1. ச வே சுப்பிரமணியன், இலக்கணத்தொகை, எழுத்து, நாகர்கோவில், 1967. 2. ச வே.சுப்பிரமணியன், இலக்கணத்தொகை, சொல், நாகர்கோவில், 1971. *'இலக்கணத் தொகை; எழுத்து'* என்னும் நூலின் ஆசியுரையில் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், 'இலக்கண நூல்களின் இடையே ஒற்றுமை வேற்றுமைகளை அறிவதற்கு இவை பயன்படும்; இந்த மாறுபாடுகளுக்குரிய காரணங்களை வரலாற்றின் வழியே விளக்கலாம் பல இலக்கணக் கொள்கைகளை வேற்றுமைகளின் வழியே (வேற்றுமை உருபுகள்) நாம் காணலாம்' எனக் கூறியுள்ளார் மொழி வரலாற்று ஆய்வு, கோட்பாட்டு வரலாற்று ஆய்வுக்கு இந்த நூல்களில் வழியமைத்துள்ளார் ச.வே.சுப்பிரமணியன் இந்த நூல்களில் செம்மை செய்ய இடமுள்ளது. (செ வை.சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, அண்ணாமலை நகர், சிதம்பரம், 1980, ப.281) ஆதலால் இந்த நூல்களின் திருந்திய பதிப்புக்களை ஒப்பாய்வு நெறியில் வெளிக்கொணர வேண்டும்

## உரைகளும் உரைக்கோவைகளும் :

ஒரு இலக்கண நூலுக்குப் பல உரைகள் உள்ளன. அவைகளை ஒன்றிணைத்துப் படிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் வசதியாக முதன் முதலில் சொல்லதிகாரத்தின் நான்கு இயல்களுக்கும் ஆபிரகாம் அருளப்பனும் வி ஐ.சுப்பிரமணியனும் சேர்ந்து *'சொல்லதிகார உரைக்கோவை'* என்ற நூலை (1963) வெளியிட்டனர் (ஆபிரகாம் அருளப்பன், வி.ஐ சுப்பிரமணியம், சொல்லதிகார உரைக்கோவை, பாளையங்கோட்டை, 1963).

சென்னை, தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆ. சிவலிங்கனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரத்தின் இயல்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி நூலாக *'உரைவளம்'* என்னும் பெயரில் 1980களிலிருந்து 18 தொகுதிகளை வெளியிட்டுள்ளது. (ஆ.சிவலிங்கனார் (பதி ஆ), *'தொல்காப்பிய உரைவளம்'*, 18 தொகுதிகள், எழுத்து, சொல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980). ஆயினும், இந்நூல்களில் அண்மைக்கால ஆய்வுச் சிந்தனைகள் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. ஒழுங்குமுறையும் பின்பற்றப்படவில்லை இருப்பினும் இந்நூல்கள் இலக்கண ஆய்வுக்கும் இலக்கணக் கல்விக்கும் பயன்பாடு உடையவையே. இவற்றை மறுபதிப்புச் செய்யும்போது செம்மைப்படுத்துதல் வேண்டும் அண்மைக்கால இலக்கிய ஆய்வுக் கொள்கைகளையும் இணைக்க வேண்டும்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணி :

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் குறித்த ஆய்வடங்கல் நூலை துரை பட்டாபிராமன்

என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1992இல் முதல் தொகுதியை வெளியிட்டது. இந்நூலில் 1985 வரை வந்த எழுத்து, சொல் ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளன. இதன் முழுத் தொகுதிகளும் வெளியானால் மட்டுமே இலக்கண ஆய்வின் முழு வளர்ச்சியையும் அறிய இயலும். ஆயினும் 20ஆம் நூற்றாண்டின் இலக்கண ஆய்வுப் பரப்பை இந்த ஆய்வடங்கல் ஓரளவு புலப்படுத்துகின்றது. (துரை. பட்டாபிராமன், இலக்கண ஆய்வடங்கல் எழுத்தும் சொல்லும்-முதல் தொகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1992) இந்நூல் 710 பக்கங்களைக் கொண்டது. இது போன்றே ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள, 'L.B.Ramaiah, Tamil Language and Linguistics, Madras, 1995' என்னும் தமிழ் மொழியியல் ஆய்வடங்கலில் பல இலக்கண ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட இலக்கண நூல்களின் ஆய்வு வரலாறும் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. கோ.கிருஷ்ணமூர்த்தி, *'தொல்காப்பிய ஆய்வின் வரலாறு'*, சென்னை, 1990 என்ற நூல் இவற்றுள் சிறப்பானது. இலக்கணக் கொள்கைகளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு இலக்கண ஆசிரியர்களின் கலைச்சொற்களின் தொகுப்பும் பேருதவியாக அமையும். இந்த வகையில் பொன்.கோதண்டராமனின் (பொற்கோ), *'இலக்கணக் கலைக்களஞ்சியம்'*, சென்னை, 1985 என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் இலக்கணக் கலைச் சொற்களைத் தொகுத்து அவைகளுக்கான விளக்கத்தையும் தருகின்றது. இதே முறையில் உரையாசிரியர்களின் உரைகளில் காணப்பெறும் இலக்கணக் கலைச்சொல் விளக்கங்கள் சா.கிருஷ்ணமூர்த்தியின் *'உரைச்சொற் களஞ்சியம்'*, சிதம்பரம், 1985 என்ற நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆதலால் இலக்கண ஆய்வுக்குப் பல பார்வை நூல்கள் வெளிவந்திருப்பதால் ஒப்பாய்வு செய்வதற்கான களன்கள் விரிவடைந்துள்ளன. இன்னும் தொல்காப்பியத்திற்குத் தொல்காப்பிய அகராதி (Word Index) மட்டுமே தேவையான ஒன்றாக உள்ளது.

**இலக்கண ஆய்வுக்களன்கள் :**

இலக்கண ஆய்வுக்களன்களை,

1. நூல் பதிப்பும் மூலபாட ஆய்வும்
2. மறு வருணனை ஆய்வும் மொழியமைப்பு மறு வருணனையும்
3. இலக்கணக் கோட்பாட்டு ஆய்வுகள்
4. ஒப்பாய்வுகள்.............. எனப் பகுப்பாய்வு செய்து ஆராயலாம்.

**1. நூல் பதிப்பும் மூலபாட ஆய்வும் :**

பழைய இலக்கண நூல்களின் ஓலைச்சுவடிகள் பல கண்டறியப்பட்டுச் சில இலக்கண நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1975இல் *'சுவாமிநாதம்'* என்னும் ஐந்திலக்கண நூலை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், 1989இல் சா.கிருட்டிணமூர்த்தி என்பவரால் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் *'இலக்கணச் சூடாமணி'* என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளன. முழுநூலாகக் கிடைக்காமல் இலக்கண உரைகளில் மேற்கோள்களாகக் காட்டப் பெற்ற அவிநயம், காக்கைப்பாடினியம் ஆகியன தனி நூல்களாகத் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளன. இதனால் இலக்கண ஆராய்ச்சி வளர்ந்துள்ளது. முன்னரே பதிப்பிக்கப்பட்ட நூல்கள் திருந்திய பகுப்புக்கும் மூலபாட ஆய்வுக்கும் உதவியுள்ளன. இவ்வகையில் அடிகளாசிரியரின் இளம்பூரணம் சொல்லதிகாரப் பதிப்பும், சுந்தரமூர்த்தியின் தொல்காப்பிய உரைப்பதிப்புக்களும் முக்கியமானவை. 1994இல் பொள்ளாச்சி ந.மகாலிங்கத்தைப் பதிப்பாசிரியராகவும், மு.இராமலிங்கம், பகீரதன் ஆகியோரை ஆராய்ச்சியாளர்களாகவும் கொண்டு *'இராமலிங்கர் (நற்)பணி மன்றம்'* தொல்காப்பியத்தை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. அக்கட்டுரைகளில் ஒரு கட்டுரையைத் தவிர ஏனைய கட்டுரைகள் இப்பதிப்பைக் கண்டனம் செய்துள்ளன.

கோபாலையர், *'தொல்காப்பிய நூற்பாக்களை முறை மாற்றி இணைத்தமை தொல்காப்பிய நெறிக்கே முரணானது. சூத்திரங்களின் இடமாற்றம் பல இடங்களில் பொருந்துவதாக இல்லை'* (பக்.6) எனவும், சுந்தரமூர்த்தி *"இவ்விரு ஆராய்ச்சியாளர்களாலும் திணிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களைத் 'தொல்காப்பியம்' என்னும் புனிதப் பெயரிட்டு அழைப்பது பொருத்தம் இன்றாம்"* (பக்.28) எனவும், ஆ.சிவலிங்கனார் *'இவ்விரு ஆய்வாளர்களின் தொல்காப்பிய வெளியீடு தமிழுக்குச் செய்யும் தீமையாகும்'*(பக்.34) என்றும், தமிழண்ணல் "இப்பதிப்பு நூல்கள் வெளியில் பரவுதல் கூடாது. *'அருட்செல்வர்'* அவர்கள் விரைவில் இந்தப் பதிப்பு நூல்களைப் போட்டு எரித்துவிட்டுப் புதிய பொன்னான பதிப்புக்களைக் கொணர்ந்து கழுவாய் தேட வேண்டும்" (பக்.70) என்றும் கடிந்து கூறியுள்ளனர். இதற்குமேல் நூல்பதிப்பு முறைக்கு விளக்கம் தேவையில்லை. இதன் பின்னர் பதிப்பகத்தாரே இந்நூல் விற்பனையை நிறுத்திவிட்டனர். (தொல்காப்பியக் கருத்தரங்கு, கருத்தரங்கக் கட்டுரைகள், இரண்டாம் தொகுதி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 1994).

நன்னூல் சிவஞானமுனிவரின் உரைப்பதிப்பு முறை தற்போது விவாதிக்கப்படுகிறது. (அ.தாமோதரன், *"நன்னூல் விருத்தியுரைக்கு ஒரு திருத்தப்பதிப்பு"*, எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர், பக். 115-119, தஞ்சாவூர், 1995.) சிவஞான முனிவரின் உரை சங்கரநமச்சிவாயர் உரையின் திருத்த உரையாகும். இன்றைய பதிப்புக்களில் சிவஞான

முனிவரின் திருத்தம் சரியாகப் புலப்படுத்தப்படவில்லை ஆதலால் அவருடைய திருத்தத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் செம்பதிப்பும், சிவஞான முனிவரால் எழுதப்பெற்ற விருத்தியுரையும், மூலக்கையேட்டைக் கண்டறியும் முயற்சியும் தேவை என்கிறார் அ.தாமோதரன்.

வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்க உரையும் ஐயத்தைக் கிளப்பியுள்ளது மூலநூலின் கருத்தை உரை சரியாக விளக்காததால் வீரமாமுனிவரே அதற்கு உரை எழுதினரா? என ஐயம் எழுந்துள்ளது. (செ வை சண்முகம், கிறித்தவ அறிஞர்களின் இலக்கணப்பணி (1993), பக் 116–122). ஆனால் இராசமாணிக்கம் உரையில் இடைச்செருகல் இருப்பதாகக் (இராசமாணிக்கம், *"வீரமாமுனிவர் அருளிய இலக்கண நூல்கள்"*, எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர், தஞ்சாவூர் (1995), பக்.123–126) கூறுகின்றார். நூலைப் பதிப்பித்த வேதகிரி முதலியார் நூலை உள்ளவாறு பதிப்பிக்காமல் பல மேற்கோள்களைச் சேர்த்து அச்சிட்டுள்ளார் இதனால் எது முனிவர் எழுதியது? எது வேதகிரியார் சேர்த்தது என்று தெரியாமல் எல்லாம் கலந்து இருக்கின்றன எனினும் அச்சாகாத சுவடிகள் இருப்பதால் அதன் துணை கொண்டு முனிவர் எழுதியபடி நூல் வெளிவரலாம் என்று இராசமாணிக்கம் கருதுகின்றார். ஆதலால் முன்னரே பதிப்பிக்கப்பட்ட இலக்கண நூல்களுக்கும் செம்பதிபுத் தேவை என வலியுறுத்த ஒப்பியல் ஆய்வு முற்படுகின்றது.

இந்த நிலையில்தான் மூலபாட ஆய்வு இலக்கண ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது தொல்காப்பிய மூலபாட ஆய்வு, தொல்காப்பியப் பாட வேறுபாடுகளாக மட்டுமே வெ.பழனியப்பனால் மேற்கொள்ளப் பெற்றுள்ளது. வெ.பழனியப்பன், *'தமிழ் நூல்களில் பாட வேறுபாடுகள்'*, (அண்ணாமலை நகர், சிதம்பரம், 1990). இந்நூல் பாட பேதஙகளை மட்டுமே ஆராய்கின்றது. *'மூலபாட ஆய்வு'* என விளக்கும்போது *இடைப்பிறழ்ச்சி, இடைவீழ்ச்சி, இடைச்செருகல், ஒன்றாக்கல், பலவாக்கல், பாடவிளக்கம், பாடப்படைப்பு, கடைச்செருகல்* போன்ற பல பிரிவுகளில் ஆராயப்பட வேண்டும் (வ சுப மாணிக்கம், தொல்காப்பியத்திறன், சிதம்பரம் (1984), பக் 82,84) என்பர். இம்முறையில் செய்யப்படும் ஆராய்ச்சியே செம்பதிப்பிற்கு வழிகாட்டும் திருவனந்தபுரம் இந்திய திராவிட மொழியியல் கழகம் தொல்காப்பியப் பாட வேறுபாடு தொகுப்புடன், M Elayaperumal, The Influence of Tolkappiam Lilatilakam', Proceedings of the first conference of Dravidian Linguists (Edr), V I Subramaniam, pp 170-173, Trivandram, 1971 என்னும் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. ஆயினும் அந்நூல் பரவலாக விற்பனைக்கு அனுப்பப்படவில்லை.

*தொடர்சசி*
*அடுதத இதழில்*

## சங்கச் செய்திகள்

19.06.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் *கவிஞர் சுரதா* அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவி *ப.மீனா சங்கரி* தமது உரையில் "பாரதிதாசனின் தலைமாணாக்கராகக் கருதத்தகும் கவிஞர் சுரதா, பாரதிதாசன்பால் கொண்ட பற்றுதலால் தன் பெயரைச் *சுப்புரத்தினதாசன்* என்று மாற்றிக்கொண்டது மட்டுமின்றி, பல நூல்களில் இருந்த பாவேந்தர் கவிதைகளை ஒரே தொகுப்பாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுத் *திருவாசகன், கல்லாடன்* பெயரில் அந்த நூல்கள் வரக் காரணமாயிருந்தவர். 1941இல் பாரதிதாசனை முதன்முதலில் கண்டு பழகிய சுரதா அவருடன் சில காலம் தங்கியிருந்து அவரது கவிதைப் பணிக்குத் துணை நின்றுள்ளார். பாவேந்தர் பாடல்களைப் படியெடுத்தல், அச்சுப் பணிகளைக் கவனித்தல், பாவேந்தரின் நூல் வெளியீட்டிற்குத் துணைநிற்றல் எனப் பல நிலைகளில் பாவேந்தருடன் சுரதா தொடர்பில் இருந்தவர். பாவேந்தர் தலைமையில் இயங்கிய தமிழ்க்கவிஞர் பெருமன்றத்திற்கு 1966இல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் *'கலைமாமணி', 'பாவேந்தர் பாரதிதாசன்', 'கவியரசர்', 'மகாகவி குமரன் ஆசான்', 'இராசராசன்'* ஆகிய பல்வேறு விருதுகளைப் பெற்றவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகக் கவிஞர் சுரதா அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

21.06.2017 அன்று மாலை 4.00 மணியளவில் உலக யோகா தினவிழா கல்லூரியில் கொண்டாடப்பட்டது. *"யோகாவின் அவசியம்"* என்ற தலைப்பில் வாடிப்பட்டி மனவளக்கலை மன்றப் பேராசிரியர் திரு.செ.தவமணி அவர்கள் சிறப்புரையாற்றினார். உடற்பயிற்சி செய்முறைகளைத் *திரு.ஆர்.எஸ். இளங்கோவன்* அவர்கள் மாணவ மாணவியருக்குச் செய்து காட்டினார். கல்லூரி யோகா ஆசிரியர் *திரு.பொ.இரா.செந்தில்முருகன்* வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் *கி.வேணுகா* அவர்கள் நன்றியுரையும் நல்கினர்.

22.06.2017 அன்று முற்பகல் 10.15 மணியளவில் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளும் 23.06.2017 அன்று நடனம் மற்றும் பேச்சுப் போட்டிகளும் 24.06.2017 அன்று விளையாட்டுப் போட்டிகளும்

நடத்தப் பெற்றன. பேச்சுப் போட்டியில் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *த.கார்த்திகா* முதலிடமும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *பெ.கிருஷ்ணவேணி* இரண்டாம் இடமும் பெற்றனர். பாட்டுப் போட்டியில் முதுகலை தமிழ் இரண்டாமாண்டு மாணவன் *கா.காளிமுத்து* முதலிடமும் இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி *இரா.தமயந்தி* இரண்டாம் இடமும் பெற்றனர். கட்டுரைப் போட்டியில் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *த.கார்த்திகா* முதலிடமும் மூன்றாமாண்டு மாணவி *பெ.கிருஷ்ணவேணி* இரண்டாம் இடமும் முதுகலை தமிழ் இரண்டாமாண்டு மாணவி பா.முருகேஸ்வரி மூன்றாம் இடமும் பெற்றனர். கவிதைப் போட்டியில் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *த.கார்த்திகா* முதலிடமும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *பெ.கிருஷ்ணவேணி* இரண்டாம் இடமும் பெற்றனர். ஓவியப் போட்டியில் தமிழாசிரியர் பயிற்சி மாணவர் *அ.பிரேம்குமார்* முதலிடமும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவர் *ஜெ.ஈஸ்வரன்* இரண்டாம் இடமும் இளங்கலை இரண்டாமாண்டு மாணவர் *க.எழில்செல்வம்* மூன்றாமிடமும் பெற்றனர்.

22.06.2017 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் *பாரத ரத்னா எம்.ஜி.ஆர்* நூற்றாண்டு விழாவினை முன்னிட்டுக் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் புத்தாக்கப் பயிற்சி நடைபெற்றது. “*புத்தாக்கம் குறித்த விழிப்புணர்வு*” என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் டாக்டர் *எஸ்.கண்ணன்* அவர்கள் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் மற்றும் துணை முதல்வர் முன்னிலை வகித்தனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் *பூ.பூங்கோதை* வரவேற்றார். முனைவர் *பா.நேருஜி* நன்றி கூறினார். நிகழ்ச்சியினை முனைவர் *மா.செல்வத்தரசி* தொகுத்து வழங்கினார்.

23.06.2017 அன்று முன்னாள் முதல்வர் *பாரத ரத்னா எம்.ஜி.ஆர்* அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டுக் கல்லூரியில் ரத்த தான முகாம் நடைபெற்றது. மாணவ மாணவியர், ஆசிரியர்கள், ரத்ததானம் செய்தனர். மதுரை அரசு மருத்துவமனை ரத்த வங்கிக் குழுவினர் சேகரித்தனர். முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

27.06.2017 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா எம்.ஜி.ஆர் அவர்களின் 100 ஆவது பிறந்த நாளை

முன்னிட்டு யானைக்கல் தரைப்பாலம் முதல் வடக்குமாசி வீதி விநாயகர் கோவில் வரை நடந்த பேரணியில் கல்லூரி மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

28.06.2017 அன்று முற்பகல் 6.30 மணியளவில் ஆயுதப்படை மைதானம் முதல் அரசரடி ரயில்வே மைதானம் வரை நடைபெற்ற தொடர் ஓட்டத்தில் கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

28.06.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் ச.மெய்யப்பனார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளம் இலக்கியம் இரண்டாம் ஆண்டு மாணவி சி.துர்காதேவி தமது உரையில் "ச.மெய்யப்பனார் அவர்கள் தமது மணிவாசகர் பதிப்பகத்தின் மூலம் மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு அன்னைத் தமிழை அழகு செய்த பெருமகனார் ஆவார், பதிப்புச் செம்மல் என்றழைக்கப்படுபவர், தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே விரிவுரையாளராகப் பணியேற்றுப் பின்பு படிப்படியாக முன்னேறிப் பேராசிரியர் நிலையை அடைந்தவர் என்றார். புதிய செய்திகளைப் புத்துணர்வுடன் தருவதோடு மட்டுமின்றி அவற்றைச் சுவையாகவும் நயமாகவும் விளக்கி மாணவர்கள் போற்றும் பெருமைமிகு பேராசிரியராகத் திகழ்ந்தவர் என்றும், இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளை இலக்கியப் பணி மற்றும் பதிப்புப் பணி என இருவகைகளாகப் பிரித்தறியலாம் என்றும் கூறினார். இவர் பதினாறு இனிய நூல்களை எழுதியவர். தாகூர் வரலாற்றை மிக எளிய முறையில் மக்களுக்கு விளங்கும் வகையில் 'தாகூர்' என்னும் நூலையும் எழுதியவர். இந்நூல் தமிழக அரசால் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதற்பரிசினைப் பெற்ற சிறப்பிற்குரியது. தமிழாசிரியராய்ப் பணியாற்றிக் கொண்டே பதிப்புத் துறையிலும் தடம் பதித்த உ.வே.சா அவர்களைப் போலவே மெய்யப்பனார் அவர்களும் தலை சிறந்த பதிப்பாசிரியர். இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். தமிழ் வளர்ச்சி ஒன்றையே தமது தலையாய குறிக்கோளாகக் கொண்டு, யாரும் வெளியிடத் தயங்கும் நூலினைக் கூட அழகாகப் பதிப்பித்து வெளியிட்டவர். இன்று தமிழ் இலக்கிய வானில் விண்மீன்களாய் ஒளிரும் எண்ணற்ற பெரும் பேராசிரியர்களின் நூல்களை வெளியிட்டுத் தமிழ் மக்களிடம் பெரும் புகழ் பெறக் காரணமாய் இருந்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ச.மெய்யப்பனார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## ஆகஸ்ட் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



கவிஞரேறு வாணிதாசன்
(7, ஆகஸ்ட் 1974)



நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை
(24, ஆகஸ்ட் 1972)



வ.சு. செங்கல்வராய பிள்ளை
(25, ஆகஸ்ட் 1971)



தெ.பொ. மீனாட்சி சுந்தரம்
(27, ஆகஸ்ட் 1980)



அ.ச. ஞானசம்பந்தனார்
(27, ஆகஸ்ட் 2002)



தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
(31, ஆகஸ்ட் 1930)

பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **வெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.வெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி



**நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை**

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்,**
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
**THE SECRETARY,**
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001.
Tamilnadu.

**Book Post**

பெறுநர் / To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. 0452 - 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு, மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403
அச்சிட்டோர்: **சிறீ அச்சகம்** 147, கீழவெளி வீதி, மதுரை–1. அலைபேசி : 97894 95738